# தென்மொழி

## புதுமைப் புரட்சியை மக்கள் தொடங்குக !

வான ளாவிய செந்தமிழ் வளர்குலம்
  வறுமையும் கீழ்மையும் அடிமையும் உற்றதால்
கூன ளாவியும் குறுகியும் சிதைந்துமோர்
  குருட்டுச் செவிடனுய்ப் பெருநடை தளர்ந்ததே !
மான மிலாததாய் மற்றவர் முன்னிலை
  மண்டி யிட்டுயிர் வாழவும் துணிந்ததே!
ஆன எழுச்சியோ டொன்றி இயங்கினல்
  அற்றைப் பெருமையும் சிறப்பும் ஆகுமே !

பூட்டிய இருப்புத் தொடரி தெறித்திடப்
  புதுமைப் புரட்சியை மக்கள் தொடங்கினல்
கூட்டை யுடைத்தரி மாவும் வெளிப்படும்
  கொள்கை போலவே உரிமையும் புலப்படும் !
நீட்டிய உறக்கம் களைந்திங் கெழுகவே
  நீணிலம் எங்கணும் வாழ்ந்திடு தமிழினம் !
ஈட்டிய பெரும் பொருள் செல்வர் ஈகுக !
  இளைஞர் கூட்டமும் எழுந்துலா வருகவே !


சுவடி : 24
ஓலை : 3



ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்



விலை
உருபா: 2-00


Scanned with CamScanner

# நமக்கு வந்த மடல்கள்.

O: 1278: அன்பும், அரவணைப்பும், - ஈடில்லாப் பேராற்றலும், இணையில்லாப் பேரறிவும் அமைந்து சிறக்கும் - தமிழ்ப் பெருங்கடலே! - தமிழினக் கலங்கரை விளக்கே! - பாவலப் பேரேறே!! - கொள்கைப் பெருநோக்குடன் வாழ்வில் வேள்வி செய்யும் அஞ்சாத அடலேறே!!! அன்பே! இப்புடவிப் பந்தில் எங்கு நான் சுழன்று திரிந்தாலும் - "ஒரு மாமாந்தனோடு சில நாள்கள் வாழ்ந்தோம்" எனப் பீடுறப் பீற்றித் திரிய வாய்ப்பளித்த தகைமைசால் அய்யாவே!

தங்கட்கு ஆயிரங்கோடி வணக்கங்களை முதலில் உரித்தாக்குகிறேன். எனது மிக இளமைக்காலத்தே - தங்களுடன் உறைந்த காலங்களைத்- தங்களுடன் தென்மொழியாம் கொள்கை ஏட்டினில்- ஒன்றி இருந்த காலங்களைப் பொற்காலமாக - மனம் நிறைவுற்ற நற்செயல் செய்த நற்காலமாகக்- கருதுகிறேன்.

அங்கிருந்து - காலச் சூழலால் பிரிந்த பின்னர் - அய்யாவோடு தொடர்புகூடக் கொள்ளாதிருந்த - இவ்விடைக் காலங்களை வெறுக்கிறேன். அவற்றிற்குக் கரணியம் நானல்லன். செந்தமிழ்ப் புலவ! - வாழ்வியலில் எனக்கு ஏற்பட்ட ஊழ்வினை நிகழ்ச்சிகளே;

தங்களிடம் இருந்த காலத்திருந்த 'உறந்தை- தமிழ்ப்பித்தன்' என்ற பெயரைப் பாவலர். தமிழ்க்கனல் என்று மாற்றிக் கொண்டேன். தங்களைப் பிரிந்த பிறகு - இன்று வரையுள்ள இவ்விடைக் காலத்தில் - அவ்வப்போது 'தென்மொழி' பார்ப்பதும், தங்களைப் பற்றி அறிந்துகொள்வதும் - மன உறவால் தங்களோடு பேசிக் கொள்வதும் உண்டு. வாழ்வில் ஏற்பட்ட தொடர்ந்த சூறுவளிகளால் தாக்குண்ட யான் - "காலச் சக்கரம் கடிதே வீழ - யானும் வீழ்ந்தேன் - என் நிலை தாழ்ந்தேன் - ஞாலத் தலைவன் இறைவன் கூற்றை - யாரே அறிவார்? நானா அறிவேன்?!" என எனக்கு நானே அமைவு செய்துகொண்டேன்.

புன்மையும், பொறுமையும், நல் உணர்வுமற்ற இம் மாந்தக் குமுகாயத்தையும் - அதனை வழி நடத்திச் செல்வதாக, வாய்ப்பறை சாற்றிக்கொண்டு, பொய்மை வழியில், ஏமாற்று ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் - அனைத்து அரசியல் தலைமை - மற்றும் தலைவர்கள் - அவர்களின் செயற்பாடுகள் கண்டு மனம் கொதிக்கின்றேன்.

எழுத எண்ணங்கள் நிறைய இருப்பினும் - வாழ்வை - உடலை- உழைப்பை - எண்ணம், செயல் உணர்வுகளை எல்லாம் - இத் தமிழ்க் குமுகாய மக்களின் மேம்பாட்டிற்காகவும், இத் தமிழ் மொழியின் தொன்மையின் உயர்வு உலகமெலாம் சிறத்தல் வேண்டும் என்பதற்காகவுமே பாடுபட்டு வரும் - தங்களது கொள்கைப் பயணத்தில் - தங்களது வாழ்நாள் இயக்கத்தின் ஒவ்வொரு விநாடியும், தாங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு சிற்றடியின் நிகழ்வுகளும் - அந்நிகழ்வுகளின் முகாமையும் கோடிப் பொன் கொண்டு கொட்டிக் கொடுத்தாலும் ஈடு செய்ய இயலாதன என்பதாலே - எளிமையானவனின் மடலை நீட்டி, அதில்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# இட்ட சாவம் முட்டுக!

முண்டையின் மகனே! முண்டையின் மகனே!
கொண்டையில் லாத ஒழுகிய முழக்குழல்
கூர்த்த கலுழன் வெவ்வாய் மூக்கின்
ஆர்த்த செருக்கோ டாண்மையின் தோற்றத்து
நாவலந் தீவின் நாயகி யென்ன
மேவலந் திரிந்த அரசியல் மேனகை—
ஆரியக் கௌடிலி-இந்திரா என்னும்
பூரியை பிதுக்கிய முண்டையின் மகனே!

சிங்களக் கொலைஞன் செயவர்த் தனன்எனும்
வெங்கணன் விரித்த வலையினில் விழுந்து
செந்தமிழ் இனத்தைச் சீரழித் திடவே
முந்து'இரா சீவ் - எனும் முண்டையின் மகனே!


உலகப் பந்தின் உயிர்ச்செறி எம்மினம்
விலகாக் குறியினன் ஆகி, விதிர்ப்புற
யாழ்த்தமிழ் மக்களின் யாக்கைகள் எல்லாம்
போழ்த்துயிர் குடிக்கும் அரக்கப் பூதனே!

நீயுநின் துணையும் நின்னிரு மக்களும்
ஏயுமிவ் வுலகத்து இருக்குநாள் தோறும்
எந்தமிழ் நல்லினத் தேற்றம் குலைதலால்
வெந்தழி யும்நாள் விரைந்துனக் கெய்துக!

இடும்பைப் பிறப்பே! ஏழிரு கோடிக்
குடும்பம் அழிக்கும் கொடியனே! நின்னைக்
கடும்புலி வரியெனச் சாவு கவ்வுக!
திடுமென நினையொரு தீச்சுழல் சூழ்க!
சூழ்ச்சியும் அரக்கமும் அதிகாரச் சூழலும்
வீழ்ச்சி யுறுக! நின்னுடல் வெடித்துச்
சுக்குநூ றுகச் சிதறுக! சூதனே!
திக்கிநா விழுக்க! நெஞ்சு தெறிக்க!

எந்தமிழ் இளையரும் ஏழைப் பெண்டிரும்
நொந்துயிர் துடிக்கையில் உளக்குலை நொய்ந்தே
இட்ட சாவங்கள் இணைந்து கூடி
முட்டுக நின்னுயிர்! மூளி,நீ யாகுக!

தமிழினம் தகைக்கும் தருக்கனே! நின்குடி
அமிழுக! ஆங்கோர் அணுவின்றி அழிக!
தணலும்எம் நெஞ்சின் தவிப்பை
மணல்,நீர், தீ,வளி, வானம் - ஆற் றுக்கவே!



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[ திருவனம் தி. பி. 1990 (1959) ]



# தென்மொழி


மொழி—இனம்—நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை,-முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்
புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசுஆர். பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி த. தானியேல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், தென்மொழி கதிர் மதியன், தென்மொழி இரா. பாலகங்காதரன் பாவலர். சா. சி. குப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ; பொன். பாலகிருட்டிணன்.
பாச்சுடர். புலவர். இரா. வடிவேலனார்: க. மு, கல், இ;
மருத்துவர்.சி. இராமச்சந்திரனார், வழக்கறிஞர். பொன்னெழிலன்
செங்கோட்டையா நல்லையா. (தொலைபேசி : 847829

சுவடி 24] ௨0௧௯ கும்பம்-மீனம் (மார்-ஏப்'88) [ஓலை 3



# பஞ்சாபும் தமிழீழமும்!

உலகெங்கும் உள்ள தேசிய இனங்கள் உள்ளுணர்வு பெற்று, எழுச்சியுற்றுத் தங்கள் தங்கள் உரிமைகளுக்காகவும், முழு இறையாண்மை கொண்ட ஆட்சிக்காகவும் போராடி வருகின்ற காலம் இது. தேசிய இனச் சிக்கலே தோன்றாது, அல்லது தோன்றக் கூடாது அல்லது தோன்றுவதற்கு வழியில்லை என்று கருதப் பெற்று வந்த பொதுவுடைமை உருசியாவில் கூட, அண்மைக் கால

மாகத் தேசிய இன மோதல்களும், அவற்றின் விளைவாக உரிமைக் குரல்களும் எழத் தொடங்கியுள்ளன.

இந்தியாவைப் பொறுத்த அளவில், இது அரசியல் விடுதலை பெற்ற நாளிலிருந்தே, இங்குத் தேசிய இனக் குமுறல்கள் இருந்தே வருகின்றன. இன்னுஞ்சொன்னால், விடுதலை பெறுவதற்கு முன்பிருந்தே அந்த உணர்வுகளும் நோக்கங்களும் இருந்தன என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த உணர்வுகளால் வெள்ளையரிடமிருந்து கிடைக்க வேண்டிய விடுதலை எங்குத் தள்ளிப் போய் விடுமோ அல்லது தவிர்ந்து விடுமோ என்று கருதிய நேரு, அன்றே ஓர் உறுதிமொழியை அக்கால் தனிநாடு கேட்டுக் கொண்டிருந்த தேசிய இனங்களுக்குக் கொடுத்தார். அது, 'இந்தியா விடுதலை பெற்ற பின், ஒன்றுபட்டு இயங்கும் குடியரசாட்சியின் நடைமுறைகள் பிடிக்காமல் அதனின்று விலகிப்போக விரும்பும் மாநிலங்களுக்குப் பேராயக் கட்சி, தனியாட்சி வழங்கும்' என்பது.

ஆனால், இன்றோ நிலைமை தலைகீழாக மாறிப் போனது. என்னவோ, இந்தியா என்பது நேருவின் குடும்பச் சொத்தைப் போலக் கருதிக் கொண்டு, 'அதைப் பிரிக்க முடியாது. தனிப்படுத்த முடியாது' என்றெல்லாம் வம்படி வழக்கடியாய்ப் பேசி, வல்லாண்மையாட்சி நடத்திக் கொண்டு வருவதுடன், தேசிய ஒருமைப்பாடு, ஒற்றுமை என்றெல்லாம், இல்லாத ஒன்றை இட்டுக் கட்டித் தேசிய இனங்களின் முழு வளர்ச்சிக்கும் முட்டுக் கட்டை போட்டு வருகின்றனர், வணிகப் பார்ப்பனியத் தில்லி ஆட்சியர். அதிலும் இராசீவோ, பாட்டனுக்குப் பேரன் பத்துப் படி மேலானவன் என்பதுபோல் இந்தியாவைத் தன் குடும்பச் சொத்தாகவே மாற்றித் தாம் வைத்ததுதான் வரிசை இட்டது தான் சட்டம் என்று எகத்தாளம் பேசி, எக்களிப்பாய் நடந்து வருகிறார். அரசியலில் முற்றி முதிராத சின்னப் பையல் இராசீவ். எனவே வருகின்ற விளைவுகளை அவர் அறியாதவராகவே இருந்து வருகிறார்.

அரசியலிலோ, பொருளியலிலோ அல்லது இனவியலிலோ ஒரு நாட்டுக்கு ஏற்படுகின்ற சிக்கல் எதுவாயினும், அச் சிக்கலுக்கான தீர்வு எதுவாக இருக்க முடியும் அல்லது இருக்க வேண்டும் என்று, ஆட்சித் தலைமையில் உள்ளவர்கள், ஆராய்ந்து அளந்து பார்த்தே முடிவு செய்தல் வேண்டும். இன்னும் அந்த ஆராய்ச்சியும், இடம், பொருள், ஏவல் என்பன பற்றியும் காலம், கருத்து, வேகம் என்பன பற்றியும், ஒரு முறைக்குப் பலமுறை எண்ணிப் பார்த்து நிகழ்த்தப் பெறுதல் வேண்டும். அதுதான் சிக்கலுக்குரிய உண்மையான தீர்வை அணுகுவதற்கு உதவ முடியும்.

அதுவல்லாமல், தம்மிடம் படைவலிமை உள்ளதென்று, அதிகார வெறிகொண்டு, கண்ணைமூடிக் கொண்டு, எதையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்றபடி ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்கு

Scanned with CamScanner

மாருக, மேலும் பல சிக்கல்களை இண்டு இணுக்குகளிலும், சிக்கு சிணுக்குகள் விழும்படி செய்துவிடும் என்று அறிதல் வேண்டும். இன்று, இந்தியாவிற்கே முகாமைச் சிக்கல்களாகவுள்ள கலிசுத்தான் போராட்டத்தையும், தமிழீழப் போராட்டத்தையும் பிள்ளையார் பிடிப்பதாகக் கருதிக் கொண்டு குரங்காகப் பிடித்ததுமன்றி, அது பிள்ளையாரேதான் என்று எத்தகைய பின்விளைவுகளையும் எண்ணிப் பாராமல் தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று முரண்டு பிடித்து வருவது, இராசீவின் அரசியல் அறியாமையைக் காட்டுவதுமன்றி, அகங்காரங் கொண்ட மனச் செருக்கையும் மெய்ப்பித்துக் காட்டுவதாகும்.

இராசீவுக்கு இப்பொழுதுள்ளனவாகக் கருதப்படும் இரண்டு தலையிடிகள், பஞ்சாபில் நடைபெறும் கலிசுத்தான் போராட்டமும், இலங்கையில் நடைபெறும் தமிழீழப் போராட்டமும்! இந்தத் தலையிடிகளை இராசீவே தம் தவருன அணுகு முறைகளால் அதிகப் படுத்திக் கொண்டு வருகிருர்.

சீக்கியர் 'கலிசுத்தான்' கேட்பது ஒருதேசிய இனப் போராட்டமே! அங்கே இந்துக்கள் என்னும் பெயரால் கொல்லப்படுபவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்களே! அவர்களுடைய ஆளுமை அதிகாரக் கைப்பற்றுதல்களையும் கொடுமைகளையும் பொறுத்துக் கொள்ள முடியாமலேயே, சீக்கியர்கள் கலிசுத்தான் தனிநாட்டுப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

இலங்கையிலும் நிலைமை ஏறத்தாழ இதைப் போன்றதே. சிங்களப்பேரின மேலாளுமையும் தமிழினத் தாழ்ச்சிக் கொடுமைகளையும் பொறுத்துக்கொள்ள இயலாமலேயே, அங்குள்ள நீண்ட காலக் கோரிக்கைகள் வெற்றி பெருத நிலையில், இறுதியாகத் தமிழீழப் போராட்டத்திற்கு எனக் கருவிகளைக் கைகளில் எடுத்துக்கொண்டு போராட முன்வந்துள்ளனர்.

பஞ்சாப் போராட்டத்தில் பெரும்பாலும் பார்ப்பனர்களே பலியாவதைத் தில்லிப் பார்ப்பனீய ஆட்சியாளர்கள், தாங்கிக்கொள்ள முடியாமல், படைத்துறையினரைக் கொண்டும், ஊர் காவல் படையினரைக் கொண்டும், கலிசுத்தான் போராட்ட வீரர்களை அடக்கி ஒடுக்கவும், முடிந்தால் அழித்தொழிக்கவும் முற்பட்டுள்ளனர். ஆனல் பார்ப்பனர்கள் கொல்லப்படுவதை மூடி மறைத்து, வெறும் 'இந்துக்கள் கொல்லப்படுகிருர்கள்' என்று, மக்களிடம் சீக்கியர்கள்மேல் வெறுப்புணர்வு ஏற்படும்படி விளம்பரப்படுத்துகின்றனர். அத்துடன் கலிசுத்தான் போராட்டம் ஒரு தேசிய இனப் போராட்டம் என்பதையும் மூடிமறைத்து, அஃது ஒரு வன்முறையாளர் போராட்டம், தேசப் பகைப் போராட்டம், என்றெல்லாம் கொச்சைப்படுத்துகின்றனர். அதே போல் இலங்கையிலும் தொடக்கத்தில், 'தமிழர்கள் கொல்லப் படுகிருர்கள்' என்பதை வெளிப்படையாகச் சொல்லாமல், 'இந்தியர்கள் கொல்லப்படுகிருர்கள்' என்று கரவாகச் சொல்லி, அஃது ஒரு தேசிய இனப் போராட்டம் • விடுதலைப் போராட்டம்

Scanned with CamScanner

என்பதை மூடி மறைக்கப் பார்த்தார்கள். பின்னர் அவ்வாறு கொல்லப்படுவது தமிழினந்தான் என்று உலகத்திற்கு வெட்ட வெளிச்சமாகிய பிறகு, அஃது ஒரு வன்முறைப் போராட்டம் என்றும், குமுகக் கொடுமையாளர்கள், நாட்டுப் பகைவர்கள் என்றெல்லாம் அதன் தகுதியைக் குறைத்துக் கூறிக் கொச்சைப்படுத்தி வருகிறார்கள்.

பஞ்சாபில் 'பார்ப்பனர்களை' 'இந்துக்கள்' என்றும் இலங்கையில் 'தமிழர்களை' 'இந்தியர்கள்' என்றும், தேசிய இனப் போராட்டங்களை மதத்தின் பெயராலும், நாட்டின் பெயராலும் அவர்கள் மறைத்துச் சொல்லுவானேன்? அதுதான், தேசிய இனப் போராட்டங்களை அவர்கள் திட்டமிட்டு ஒடுக்குகின்ற கரவான செயல் என்று அறிதல் வேண்டும்.

மேலும், தேசிய இன உரிமைகளை ஓர் இனம் கோரிக்கைகளாக எழுப்புமாயின், அதன் தாக்கமுறும் உரிமைகள் என்னென்ன, அவற்றை அது பெறுவதற்கான வாய்ப்புகள் எவையெவை என்பன போன்ற அணுகுமுறைகளை ஓர் அரசு கவனியாமலேயே, கருத்துக் கொள்ளாமலேயே, அப்போராட்டங்களைத் தனக்கிருக்கும் பெருத்த படை வலிவுகளையும் கருவி வலிவுகளையும் கொண்டு அடக்க நினைப்பதும், ஒடுக்க முனைவதும் அதிகார வெறியும் ஆளுமைச் செருக்கும் கொண்ட செயல்களாகும்.

இந்தியா என்பதை ஒரு நாடாகக் கருதிக்கொள்வதும், இந்தியாவில் உள்ள அனைத்துத் தேசிய இனங்களையும் உலகில் என்றுமே நிகழாத வியப்பான ஒரு மாந்த மரபு நிலைக்குப் பொருத்தமில்லாத வகையில், ஒரே தேசிய இனமாக ஆக்க முயற்சி செய்வதும் ஆணைப் பெண்ணுக்கும், ஆனையைப் பூனையாக்கும் அடாவடித்தனமான அறியாமை முயற்சியாகும். இது இராசீவ் போன்ற கோமாளிகளுக்கே அல்லது அவரது தாய் போன்ற இராமாயணக் கைகேயிகளுக்கே தோன்றுகின்ற கோணல் உத்தியாகும். இது மாந்த அறிவியலுக்கும் மனவியலுக்கும் பொருந்தாது.

எனவே, இராசீவின் இந்தக் கோணல் அணுகுமுறைகளால் பலப்பல சேதங்களும் ஏதங்களும் இந்திய அரசியல் வானில் ஏற்பட்டு, வல்லிடிகளாகவும் கதிரவ மின்னல்களாகவும் அடாவடித்தனங்களையும் அரக்கத்தனங்களையும் உண்டாக்கி வருகின்றன.

என்றுமே பொய் பொய்தான்! மெய் மெய்தான்! துமுக்கிக் குண்டுகளாலும், பெருங்குழாய் (பீரங்கி) வெடிகளாலும், தகரிப் (டாங்கி) படை, காலாட்படை, கப்பல், வானூர்திப் படைகளாலும் பொய் மெய்யாகி விடாது! மெய் பொய்யாகி விடாது! பொறுக்கித் தின்னிகளாலும், பரந்துபட்ட பெரியநிலப் பரப்பில் கொள்ளையடிப்பதும், அங்கு ஓடி இங்கு ஓடி வாய்ப்பாக, எளிமையாகத் தங்களை மறைத்துக் கொள்ளும் பணமுதலைகளாலும், எத்தனை ஒருமைப்பாடுகளும், தேசிய நீரோட்டங்களும்

பேசப்பட்டாலும், பரப்பப்பட்டாலும், தேசிய இன முயற்சிகள் தொய்வடையா; இல்லாமற் போய்விடா; தவறாகவும் ஆகிவிடா. என்றேனும் அவை உள்ளுணர்வு கனன்று வெடித்துச் சிதறச் செய்யும் புரட்சியால், இந்தியா சுக்குநூறாகப் பிரிவுபடப் - பிளவுபடப் போவது இமயமலை போன்ற உண்மையே!

அந்த — நடைபெறப் போகும் உண்மை நிலையை எண்ணிப் பார்த்து, அதற்குகந்தபடி, தம்மைத் தகவமைத்துக் கொண்டு, தம் தன்மதிப்புப் பாராமல், விருப்பு வெறுப்பு நோக்காமல் — கலிசுத்தான் போராளிகளையும், தமிழீழ விடுதலை வீரர்களையும் நேரில் அழைத்துப் பேசி, ஓர் இனநலச் சமன்பாட்டுக்கு வழியமைக்கவில்லையானால், இராசீவ் அரசதந்திரமும், படை வலிமையும், ஆட்சியதிகாரமும் காலப்போக்கில் அவரைக் கீழே தள்ளி விடும் என்பதை அப் பெரிய (!) அரசியல் மேதை (!) உணர்ந்து கொள்வது நல்லது! இல்லையெனில் இங்குள்ள தேசிய இனங்களின் இடுக்கிப் பிடிகளில் அவர் சிக்கிச் சிதைய வேண்டியிருக்கும்.

---

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம், திருக்குறள் ஆய்வகம்.

திருக்குறளுக்கு முன்னர்த் தோன்றிய பழைய உரைகளே-யன்றிப் பின்னர் எழுந்த பல புதிய உரைகளையும் குறள் குறித்தெழுதப் பெற்ற உரைநடை நூல்கள், கட்டுரைகள், மலர்கள், இதழ்கள், ஆங்கில மொழி பெயர்ப்புகள், இதுவரை வெளிவராது குறித்து வைக்கப்பெற்ற புதுக்குறிப்புகள் ஆகியவற்றையும் கண்டு, அவற்றிலுள்ள வேறுபட்ட உரைகளைத் தொகுத்தும் ஏற்றுக்கொள்ளத் தக்க உரை எது என விளக்கி முடிவு சுட்டியும், ‘திருக்குறள் உரை வேற்றுமை’ என்னும் பெயரில் அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்றிற்கும் முன்னைய நிலையிலும் விரிவாக எழுதி வெளியிட அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை திட்டமிட்டுள்ளது.

நீங்கள் எழுதிய உரை நூலிலோ, உரைநடை நூலிலோ கட்டுரையிலோ புதிய உரை காணப்படுமாயின் அதுபற்றிய விளக்கத்தைக் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதுங்கள். எழுத்து வடிவம் பெறாது புதிய உரை கண்டிருந்தாலும் அதனைத் தங்கள் பெயரோடு தெரிவிப்பின் “உரை வேற்றுமையில்” நன்றியுடன் சேர்த்துக்கொள்ளப் பெறும். புத்தகமோ, கட்டுரையோ இப்பொழுது கிடைத்தல் அரிதெனில் புதிய குறட்செய்தியை மட்டும் எழுதியனுப்பின் உரை வேற்றுமை நூலில் சேர்க்க வாய்ப்பாக இருக்கும்.

திருக்குறள் பயிற்சி பெற்ற அன்பர்கள் தாம் நுண்ணிதிற் கண்ட புதிய உரையைத் தரின் ‘திருக்குறள் உரை வேற்றுமை’ வாயிலாகத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு அறிவித்துக் குறட் கல்வியை வளர்க்க உதவும். தங்கள் கருத்தை அறிவியுங்கள்.

பர். இரா. சாரங்கபாணி, திருக்குறள் இருக்கை, தமிழ்த் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்-608 002.

Scanned with CamScanner

சென்னையில், அறிவியக்கப் பேரவை நடத்தும்

# தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வுரிமை மாநாடு!

காலம், இடம்: 22-5-88, பாவாணர் நூலக அரங்கம்

**பேரா. சாலை இளந்திரையனார்**
**பேரா. சாலினி இளந்திரையனார்**
**பாவலரேறு பெருஞ்சித்திரனார், ப. நெடுமாறன்**

ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

மற்றும் கி. வீரமணி, முனைவர் க. ப. அறவாணன், முனைவர் இளவரசு, பாவலர் இன்குலாப், தி. இராமதாசு, பெ. மணியரசன், முனைவர் தமிழ்க்குடிமகன், முனைவர் மா. நன்னன், எசு. வி. இராசதுரை, கீதாலயன், நடிகர் இராதாரவி முதலியோரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

---

## முகவர்கள் அன்பர்கள் கவனிக்க!

அளவுக்கு மீறிய தாள், பிற அச்சுப் பொருள்களின் விலை ஏற்றத்தால் **தென்மொழி** விலை இவ்விதழ் முதல் இரண்டு உருபாவாக ஏற்றப்பெறுகிறது. அதுபோல் ஆண்டுக் கட்டணம் உருபா 24 - ஆகவும், அரையாண்டுக் கட்டணம் உருபா பன்னிரண்டாகவும் உயர்த்தப் பெற்றுள்ளன. அன்பர்கள் இவ்விலையேற்றத்தைப் பொறுத்துக்கொண்டு தொடர்ந்து ஆதரவு கொடுக்க வேண்டுகிறோம்.

— அமைச்சர்.

---

## தொண்டு செய்ய நல்வாய்ப்பு!

தொண்டுள்ளமும், தூய தமிழ் உணர்வும், தமிழ் இலக்கண இலக்கிய அறிவும், நல்ல ஆங்கில எழுத்து, பேச்சு ஆற்றல்களும், ஓரளவு அச்சுத் தொழிலறிவும், மேலாளுமைத் திறமும் கடமையுணர்வும் பொறுப்பாண்மையும், எடுத்தாற்றிச் செய்யும் செயல் திறனும் கொண்ட ஒருவர் தென்மொழி அமைச்சர் பணிக்குத் தேவை. கல்வித்தகுதி: குறைந்தது முதுகலை (M.A.,) பட்டப் படிப்பு, துணைத் தகுதிகள் கவனிக்கப் பெறும்.

மாதச் சம்பளம்: உருபா 500. ஆண்டு உயர்த்தம் 25 உருபா

தேர்வு பெறுபவர்கள் உடனடியாக உருபா 1,000 பொறுப்புத் தொகையாகச் செலுத்திப் பணியில் சேரவேண்டும். பணியை ஒப்புக்கொண்டவர்கள் குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு ஒப்பந்த முறையில் பணியாற்றுதல் வேண்டும்.

விருப்பமுள்ளவர்கள் தம் கல்விச் சான்றிதழ்கள், பிற தகுதிச் சான்றிதழ்கள் இவற்றின் படப்படிகளுடன், தம் சொந்தக் கையெழுத்தால் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிய வேண்டுகைப் படிவத்துடன் உடனே 'ஆசிரியர், தென்மொழி, சென்னை-5' என்னும் முகவரிக்கு விடுத்திடல் வேண்டும். — அமைச்சர்.

Scanned with CamScanner

நூல் மதிப்பீடு : 1.

# செயலும் செயல் திறனும்.

பல்லடம் : மா. ஆறுமுகம்.

(பாவலரேறு அவர்களின் 'செயலும் செயல் திறனும்' நூல் வெளியீட்டு விழா கடந்த 16-3-88 அன்று, சென்னை, தேவநேயப் பாவாணர் நடுவண் நூலரங்கில் உயர் நெறி மன்ற வழக்கறிஞரும், 'செந்தமிழ் நூல் வெளியீட்டுக் குழு'த் தலைவரும் ஆகிய திரு நா. நல்லப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவில் நூலை மதிப்பிட்டு அறிஞர் பலர் உரையாற்றினர்கள். அவ்வுரைகளில் ஒன்று இது. பிறரின் திறனாய்வுரைகளும் அவ்வப் பொழுது வெளியிடப்பெறும்.)

தமிழ் எழுத்துலக வரலாற்றின் ஒரு மிகச் சிறந்த வாழ்வியல் அறிவுநூல் வெளியீட்டு விழா அவையினில் நிற்கின்றேன். இந்த நேரத்தில், தமது இராமகாதையில் கம்பரது கூற்று ஒன்றினை நினைவு கூர்கின்றேன். ஒரு சிறு பூனை, ஒரு பெரும் பாற்கடல் முழுவதையும் தன்னால் குடித்துவிட முடியும் என்றெண்ணிக் குடிக்க முற்பட்ட தாம். அதுபோலத்தான், படிக்கப் படிக்கப் பலப்பல பொருள் விளக்கங்களும், வேறெங்கும் எவரிடத்தும் பெறஇயலாத திருக்குறள் மெய் விளக்கங்களும் மண்டிக் கிடக்கும், நம் பாவலரேறு அவர்களின், 'செயலும் செயல் திறனும்' என்ற மிகச் சிறந்த உரைநூலிற்கு மதிப்புரை வழங்க நான் முற்படுவதும் ஆகும், என்பதை நானே உணர்வேன். நேர்ந்த இச் செயல் பற்றி வியப்பும், என் திறன் எண்ணித் தயக்கமும் மிக அடைகிறேன்.

ஆயினும் என் அறிவை விட என் மேல் கொண்டுள்ள அன்பு மிகுதியால் இச்செயலுக்கு என்னைப் பணித்த பாவலரேறு ஐயா அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது போலவே என்னிலும் திறன் வாய்ந்த பலரிருக்க எனக்கு இவ்வாய்ப்பினை அளித்த செந்தமிழ் நூல் வெளியீட்டுக் குழுவினர்க்கு, என் நன்றியினை உரித்தாக்குகிறேன்.

இந்நூல் பற்றிச் சில கூறுமுன்னர், நூலாசிரியர் பற்றிச் சில கூற வேண்டும்: மாந்த நலனில் பெரிதும் அக்கறையும் விழைவும் கொண்ட மனம்; பொது நலனையே நினைந்து நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து கனியாய்க் கனிந்த மனம்; திருவள்ளுவத்திலேயே தோய்ந்து தோய்ந்து எதற்கும் எல்லாவற்றிற்கும் திருக்குறளே தீர்வு என்று ஆய்ந்து முழுவதும் வள்ளுவத்திலேயே ஊறிப்போன அறிவு; எப்படி ஒரு தாய் தன் அருமைக் குழந்தையைத் தன்னை மறந்து, கண்ணே மணியே, முத்தே பொன்னே, இராசாவே, என்றெல்லாம் பெயர்கள் சூட்டிக் கொஞ்சி மகிழ்ந்து, தானும் குழந்தையோடு ஒன்றுவாளோ, அதுபோலவே, நூலாசிரியர் பாவலரேறு அவர்கள், தம் அறிவாசானாகிய திருவள்ளுவரைப்

பேராசான் என்றும், அறமுதல் ஆசானென்றும், பெருமான் என்றும், பெருந்தகை என்றும், ஐயனென்றும் ஆசானென்றும் இந்நூலிலே பற்பல பெயர்கள் சூட்டி மகிழ்ந்து மகிழ்ந்து, திருவள்ளுவரையே போற்றித் தம்மையே மறந்து தம் ஆசான் போலவே ஆகிப்போன உடல்; இப்படியாகப் பொது நலனில் கனிந்த மனம், வள்ளுவத்தில் தோய்ந்த அறிவு, அவரது ஆசான் போலவே உருவாகிய உடல், இவை கொண்ட நம் பாவலரேறு அவர்கள் மாந்தனின், மனம், அறிவு, உடல் ஆகியன ஈடுபட்டு இயங்கும் வாழ்கையின், செயலும், செயல்திறனும் பற்றி விளக்கியுள்ள ஓர் அறிவுக்கருவூலம் ஆகும் இந்நூல்.

ஏறக்குறைய 430 குறள்கள் இந்நூலில் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. இந்தக் குறள்களுக்கு எடுத்துக்காட்டு விளக்கங்கள் தாம் இந்நூலா அல்லது இந்த நூல் கருத்துகளை விளக்கக் குறள்கள்எடுத்துக் காட்டுகளா என்று நாம் பிரித்துணர முடியாதவாறு குறள்களும், விளக்கங்களும் பின்னிப் பிணைந்து ஓர் அருமையில் அமைந்த நூல் இது. 'கனிச்சாறு' போல இது குறட்சாறு. வாக்குண்டாம், நல்வழி, நீதிநெறி விளக்கம்,திருமந்திரம் அகநானூறு புறநானூறு, கலித் தொகை, பதிற்றுப்பத்து ஆகிய நூல்களின் சில பாடல்கள் தவிர்த்து, இந்நூல் முழுவதும் திருக்குறளின் ஆட்சியே; அதன் மாட்சியே; அடடா! என்னென்ன விளக்கங்கள், விரிவுகள், பொருள் செறிவுகள், நுட்ப வெளிப்பாடுகள், எளிய எடுத்துக்காட்டுகள் — இப்படியெல்லாம் விளக்கி, உணரவைக்குமாறு எழுதமுடிந்த அவரது திறனை எண்ணி எண்ணி வியக்க வேண்டியதாக உள்ளது.

இனி, இந்நூல் தோன்றியதன் தேவை என்ன என்பதை உணரவேண்டும். இதனை நூலாசிரியர் பாவலரேறு அவர்களே குறிப்பிடுகின்றார். இக்காலத்து இளைஞர் பலரும் பெரியவர்கள் சிலரும் வினை அல்லது செயல் என்பது பற்றியோ, வினைத்திறன் அல்லது செயல்திறன் பற்றியோ அறிவற்றவர்களாக இருப்பதைப் பல நிலைகளிலும் கண்டு மிகவும் வருந்தி, இவை எழுத வேண்டியதாயிற்று என்கிறார்.

எனவே பிறர் அறியாமை கண்டு வருந்தி, அவர்களது நலனில் அக்கறை கொண்டு, அவர்களைச் செயலாற்றத் தூண்டுவதற்கென எழுந்த எழுச்சிநூலாக இ'து அமைகிறது. இந்த உண்மை நூல்முழுவதும் பரவிக்கிடக்கக் காணலாம். நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் வாழ்க்கையின் செயலும் செயல்திறன்களும் பற்றிய நுட்ப விளக்கங்களும், அவை செப்பமடைய வேண்டி உணர்ந்து உணர்ந்து எழுதப்பட்ட எழுத்து வன்மையையும் உணர்கிறோம்.

ஒருபடம் மாட்ட ஆணி அடிக்கும் சிறு செயலில் இருந்து அமெரிக்க நாட்டு விடுதலை மறத்தியின் சில உருவாகிய வரலாற்றுப் பெருஞ் செயல் வரை, செப்பமான செயல் திறன்கள் பற்றிய

அவருடையவிளக்கங்கள் நம்மைப்பெரிதும் சிந்திக்கவும் செயலாற்றவும் தூண்டுகின்றன. ஆக்கப்பணிகளில் நம்மை ஈடுபடுமாறு மிக அருமையாக வழி நடத்துகின்றன. துணை நிற்கின்றன.

மேலும், உடலோம்பல் பற்றி இந்நூலில் கூறியுள்ள அறிவுரைகள் பெரிதும் பயனுடையன. மிக ஆழமாகவும், அக்கறையோடும் எண்ணி, நமக்குத் திரும்பத் திரும்பத் கூறியுள்ள நடைமுறைகள் நமக்குப் பெரும் விழிப்புணர்வைத் தருகின்றன.

உடல் நலிவுகள் பற்றியும், கைகால் இடுக்குகளைத் தூய்மையாக வைத்திருத்தல் பற்றியும், எருவாய், கருவாய்களைத் தூய்மையாக்கும் தேவைகளையும், முறைகளையும் இந்நூலில் கூறப்பட்டிருப்பன போன்று, எந்த மருத்துவர்களும் கூட நமக்குக் கூறியிருக்கமாட்டார்கள். ''புறந்தூய்மை நீரால் அமையும்'' என்ற திருக்குறள் வரி, எப்படி ஒரு தாழ்ந்த குமுகாயத்தையே தட்டி எழுப்பிச் சீர்செய்து, உயர்த்தி விட்டிருக்கிறது என்ற வரலாற்று உண்மையை நேரில் கண்டுணர்ந்து எங்களில் சிலர் திகைப்புற்றிருக்கின்றோம். பாவலரேறு அவர்கள் இந்நூலில் ஐந்து பக்கங்களை ஒதுக்கி அந்தக் குறள் வரியினைத் தெளிவாக்கி, விரிவாக்கிக் கூறியுள்ள அருமை கண்டு, ஒருபெரும் ஒற்றுமை உணர்வைக் கண்டு, எண்ணிப் பெரும் உவகை அடைவதாக உள்ளது.

இந்நூலினை ஊன்றிப்படித்தால், நூல் முழுவதும் ஆசிரியரின் வருத்த உணர்ச்சி ஊடாடி வருவதைத் தெளிவாகஉணரமுடியும். மாந்தரின் உடல் நலிவுகளை, அறிவுத் தாழ்ச்சிகளை, வினைத்தளர்ச்சிகளை, திறக்குறைபாடுகளை எண்ணி எண்ணி வருந்தியும் அவற்றைச் சீராக்கிச் செப்பமடைய வேண்டி, திருக்குறளின் பெருந்துணை கொண்டு, ஐயா அவர்கள் செய்துள்ள இத்திருவினையாக்கும் முயற்சியை, உணர்ந்து நாம் அனைவரும் இறும்பூது எய்த வேண்டும். அரசு அலுவல்துறை, அறிவுத்துறை, எழுத்துத் துறை இவற்றிலேயே ஈடுபட்டவர் பாவலரேறு அவர்கள். ஆனால் வணிகத்துறை பற்றி அக்கு வேறு ஆணி வேறாகப் பிளந்து காட்டுகிறார். தொழிற் சிக்கல்களின் மூலை, முடுக்கு, இண்டு இடுக்கெல்லாம் புகுந்தும் துருவியும் ஆய்ந்தும் அவர் எழுதியுள்ள பாங்கும், நுட்பமும் மெய்சிலிர்க்க வைக்கின்றன. Henry Ford, டாடா, பிர்லா முதலிய உலகப்பெரும் தொழில் முதலாளிகளுக்கும், தொழில் விற்பன்னர்களுக்கும் புரியாத பல சிக்கல்களின் மூலங்களையும் கூறித் தீர்வுகளையும் எளிதாகக் கூறுகிறார். மிக வியப்பாக இருக்கிறது.

ஒரு பெரும் வெற்றி பெற்ற தொழில் வல்லுநர் போல வணிகம் பற்றிய பல கூறுகளையும் ஆய்ந்து கூறுகிறார்.

ஒரு பெரும் மருத்துவர் போல உடல் நலம் பேணுதல் பற்றித் தெளிவு செய்கிறார்.

ஒரு தேர்ந்த பொறியாளர் போலக் கருவிகளைப் பற்றியும் கையாளுதல் பற்றியும் கணித்துக் கூறுகிறார்.

ஒரு சிறந்த மெய்ம்மைப் பேரறிஞர் போல வாழ்க்கை முறை களையே அளவிட்டு, அறுதியிட்டுக் கூறுகிறார்.

ஓர் அன்புமிக்க ஆசான்போல மக்கள் குறைகளைச் செப்பமாக்கும் முறைகளைக் குழைந்து, குழைந்து திரும்பத் திரும்ப அறிவுறுத்துகிறார்.

ஓர் அருமை நண்பர் போல நம் சோர்வெல்லாம் அகற்றித் துள்ளி எழுந்து வெற்றி நோக்கிச் செல்லுமாறு நம் சிந்தனைகளையும் செயல்களையும் தூண்டுகிறார்.

ஒருதாய் போலத் தந்தைபோல, அன்றாட வாழ்க்கை நடைமுறைகளை, வழிமுறைகளை யெல்லாம் வகுத்து வகுத்து வழி நடத்துகிறார்.

வாழ்வில் எதையெல்லாம், நாம் வலிமைக்குறை (Weakness) என்றெண்ணிச் சோர்வடைகிறோமோ, அவையெல்லாம் இயல்பே என்கிறார்; இயற்கையே என்கிறார்.

இடையூறு கண்டு மனந்தளராமை, அக, புறத் தாக்கங்கள், எதிர்ப்பு, இழப்புகண்டு சோர்வுறாமை, துன்பங்கண்டு துவளாமை இயற்கை அறவழி பிறழாமை, எச்சரிக்கையும், கண்காணிப்பும், மான உணர்வு, கலைஆர்வம், ஈகை அளவு, அழகுணர்வு, சுவை உணர்வு, எவர்க்கும் கட்டுப்படாத தன்மை, பிறர் கூறும் பழிகளைப் பொருட்படுத்தாமை, எளிதில் நம்பும் தன்மை, நம்பாத தன்மை, துணையாளர்கள், பணியாளர்கள் — போன்ற பலவற்றின் விளக்கங்களின் மூலம் நம் குறைகளை யெல்லாம் நீக்குகிறார்; நம்மை நிறையாக்குகிறார்; நேர்மையாக்குகிறார்; நம்மைப் புத்துணர்வோடு, ஏறுபோல் பீடு நடைபோட வழிகாட்டுகிறார்; செம்பைப் பொன்னுக்கும் 'இரசவாத வித்தை'யைச் செய்து காட்டுகிறார்.

வினையின்பம் என்பது உயிருக்கு விளையும் இன்பம், பொருளின்பம் என்பது உடலுக்கு விளையும் இன்பம் என்று கூறுவதில், நம் மனமயக்கங்களை ஓட்டி உண்மை இன்பத்தைப் பெற வழி காட்டுகிறார். எவ்வளவு பேர் இதை உணர்ந்து கொள்வார்களோ தெரியவில்லை. ஆனல் என்ன அருமையான உண்மை! முடிந்த முடிபு!

இப்படியே நூல் முழுவதும், 325 பக்கங்களில் எடுத்தாளப் பெற்ற ஏறக்குறைய 431 திருக்குறள் துணை கொண்டு, அறிவுக் களத்தில் நின்று, அரும்பாடு பட்டு, அமர்செய்து, வெற்றி கண்டு, நம்மை வழி நடத்தத்துடித்து, எழுதியிருக்கிறார். கையாளப்பட்ட 431 குறள்களில் பலதிரும்பத் திரும்ப வருகின்றன. இவை 56 தொடர்களில் 7 ஆண்டுகளாக எழுதப் பெற்ற தொடர் ஆனதால் நேர்ந்து இருக்கலாம். ஆனல் திரும்பத்திரும்ப வரினும் அவை ஒவ்வோர் இடத்திலும் அப்படியே பொருந்தி, புதுப்புது விளக்கங்களை அளிப்பதை உணரும்போது பெரும் வியப்பும், மகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்கிறோம்;

Scanned with CamScanner

இனி இறுதியாக, ஐயா அவர்களின் இம்முயற்சி, கடும் ஆய்வு, ஏழாண்டுக்கால சூல், இவையெல்லாம் யாருக்காக, எதற்காக என்றுதான் நாம் எண்ண வேண்டும். யாவும் நமக்காகத்தான். எல்லா நிலைகளிலும் தாழ்ந்து தடுமாறி அழிநிலைக்குச் சென்று கொண்டிருக்கும், நம் தமிழருக்குத்தான் இத்துணையும் கூறி, இவன் மாசெல்லாம் களைந்து மனமெல்லாம் உரமேற்றி, செயலும் செயல்திறனும் மிக்கவனாக்கி, நம்மொழியை, இனத்தை, நாட்டை மீட்டெடுக்க மாட்டானா என்ற ஏக்கத்தால் தான், அந்த நோக்கத்தால்தான் நம் பாவலரேறு அவர்களால் இந் நூல் ஆக்கப்பட்டுள்ளது.

அவர் பணி ஒன்று செவ்வனே முடிந்துள்ளது. அடிமை உணர்வு மிக்கத் தமிழர்களாகிய நாம் என்ன செய்யப் போகிறோம்?

செயலும், செயல் திறனும் பெற்று நலம் பெறுவோமா? நாட்டிற்கு நலம் செய்வோமா முயற்சி நம்முடையதே; முடிவும் நம்முடையதே. இதுவே இந்த நூற்பயன் என்று கூறித் தமிழரின் எழுச்சி நூலாகிய இதனை எழுதி எமக்களித்ததற்கு நெஞ்சார்ந்த நன்றியினை, ஐயா பாவலரேறு அவர்களுக்கு உரித்தாக்கி அமைகிறேன்.

---


வெளிவந்துவிட்டது!

'பாவலரேறு' அவர்களின்

# செயலும் செயல்திறனும்

அரிய வாழ்வியல் நூல்!

424 பக்கங்கள் விலை 35 உருபா

பதிவுக் கொடுப்பு (Recorded Delivery) அஞ்சலில் பெற விரும்புவோர் 40 உருபா அனுப்புக!

தென்மொழி, சென்னை-5.


---

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956)
19-ஈ. ஆ. (வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி)

| | | |
|---|---|---|
| 1. வெளியிடும் இடம் | : | சென்னை |
| 2. காலமுறை | : | மாதம் ஒருமுறை |
| 3. அச்சிடுவோர் பெயர் | : | திருவாட்டி. மா. [illegible] |
| இனம் | : | தமிழர் |
| முகவரி | : | தென்மொழி அச்சகம் சென்னை-5 |
| 4. வெளியிடுவோர் பெயர் | : | திரு. பெருஞ்சித்திரனார் |
| இனம் | : | தமிழர் |
| முகவரி | : | தென்மொழி அச்சகம் சென்னை-5 |
| 5. ஆசிரியர் பெயர் | : | திரு. பெருஞ்சித்திரனார் |
| முகவரி | : | சென்னை-5 |
| ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவர்களும் | | திரு பெருஞ்சித்திரனார் சென்னை-5. |

பெருஞ்சித்திரனாகிய நான் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)


சலுகை விலையில்

50 இதழ்கள் கொண்ட

தென்மொழி: 15-00

தமிழ்ச்சிட்டு 7-50

(அஞ்சல் செலவு உட்பட)
உடனே எழுதுங்கள்.

தென்மொழி, சென்னை - 5

(அண்மையில் மறைந்த 'டார்ப்பிடோ' சனார்த்தனம் நம் அன்புக்கு மிகவும் உரிய சிறந்த மாமேதை! தூய்மையான தொண்டுள்ளமும் அறிவாண்மையும் உழைப்பும் மிகுந்த அரிய பகுத்தறிவியக்கத் தலைவர் அவர். ஆனால் அவரைத் தமிழகம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவே இல்லை. அவரைப் பற்றிய சிறிய நினைவு இது. அவரின் துணைவியார் எழுதியது.)

# அவர்தாம் சனார்த்தனம்!

**-ஏ. பி. ச. மனோரஞ்சிதம்**

(மறைந்த தமிழினத் தலைவர், குமுகாயவியல் பேரறிஞர் 'டார்ப்பிடோ' ஏ.பி. சனார்த்தனம் அவர்களின் துணைவியார்.)

**1952**-இல் நான் பள்ளியிறுதி வகுப்பு முடித்தபின் தந்தை பெரியாரிடம் இந்த நாட்டுக்கு - இயக்கத்திற்குத் தொண்டு செய்ய என் தந்தை **வி.தி. பொன்னுசாமி** அவர்கள் அழைத்துச் சென்று, என்னை ஒப்படைத்துவிட்டார்கள்.' அப்போது தேனாம்பேட்டையில் திராவிடர் கழகக் கூட்டம். அதில் தந்தை **பெரியார்** பேசும்போது அவர் சொற்பொழிவைச் சுருக்கெழுத்தில்லாமலே அப்படியே எழுதிக் கொண்டிருந்தேன். அந்த இடத்தில் என்னைப் பார்த்த திரு. சனார்த்தனம் அவர்கள் 'இது யார்' புதியதாக ஒரு பைத்தியம் எழுதிக் கொண்டிருக்கிறதே' என்று பகடி(கேலி)யாக நண்பர்களிடம் கூறினாராம். இதைப் பின்னாளில் என்னிடம் கூறிச் சிரித்தார். அப்போது அவர்தாம் 'டார்ப்பிடோ' என்று எனக்குத் தெரியாது.

சோமரசம்பேட்டை (திருச்சி) மாவட்டத்தில்தான் அவர் தொண்டையும், எளிமையான பண்புகளையும் இந்த இயக்கத்திற்கு ஒரு ***காமராசர்*** போல 30 அகவைக்குமேல் ஆகியும் திருமணம் செய்துகொள்ளாமல், தொடர்வண்டியையே வீடாகக் கொண்டு நாளும் அலையும் உழைப்பையும் புகழ்ந்து திரு. **வேதாசலம்** அவர்கள் பேசிய பேச்சைக் கேட்ட பிறகே என் கவனம் அவர்பால் திரும்பியது.

மாநாடுகளுக்குச் செல்லும் போதெல்லாம் என் கண்ணும், கருத்தும் அவரையே தொடரும். அவரைச் சுற்றி மாணவர் கூட்டம் பலாப்பழத்தில் ஈ மொய்ப்பதைப்போல மொய்த்துக் கொண்டிருக்கும். திராவிட மாணவர் கழகத் தலைவராக, மாணவர்கட்கு வழிகாட்டியாக, ஒரு படைத்தலைவனைப் போல அவர் இருந்தார். திருச்சி தேவர் மன்றத்தில் நடந்த மாணவர் மாநாட்டிலும், நாகப்பட்டினம், பம்பாய் மாநாடுகளிலும் அவர் தலைமையில் நான் பேசியிருக்கிறேன்.

எங்கள் திருமணத்தை 1956 நவம்பர் 4ஆம் பக்கல் தந்தை **பெரியார்** மிகச் சிறப்பாக நடத்தினார்கள். அது திராவிடர் கழகத்-

தின் பொற்காலம். மலாயா, சிங்கப்பூரிலிருந்தும், பம்பாய் மற்றும் தென்னாடெங்கிலும் இருந்தும் இயக்கத் தோழர்கள் குடும்பத்தோடு கலந்துகொண்டு திருவிழாப்போல எங்கள் திருமணத்தை ஆரவாரக்-கோலமாகக் கொண்டாடினார்கள்.

முதலில் இவர் என்னிடம் பேசியது என்ன தெரியுமா? ''நாம் இருவரும் போர்க்களத்தில் திருமணம் செய்து கொண்டிருக்கிறோம். எந்த நேரத்திலும் நாம் போராட்டத்தில் சிறை செல்லவோ, உயிரிழக்கவோ நேரிடும். அதற்கெல்லாம் மனம் கலங்காமல் உறுதியோடு என்னுடன் ஒத்துழைப்பாயா?'' என்றுதான் கேட்டார். 'திருமணமான அந்த வினாடியே மனோ எரிந்துவிட்டாள். இப்போது இருப்பது உங்களின் ஓர் உறுப்பு. அஃது எப்படி உங்களோடு ஒத்துழைக்காமல் இருக்கும். எனக்கென்று தனியான விருப்பு வெறுப்புகள் எதுவுமில்லை'' என்று கூறினேன். மிகவும் மகிழ்ச்சி-யோடு எங்கள் பாவிய வாழ்க்கையைத் தொடங்கினோம்.

அவர் கூறியதைப் போலவே திருமணமான ஓராண்டுக்குள் எனக்கு 6 மாதம் சிறைத் தண்டனை! அவருக்கு 9 மாதம் சிறை! நான் வேலூர்ச் சிறையில்! அவர் சென்னைச் சிறையில். சட்டம் கொளுத்தியும், மறியலிலும் சிறைத் தண்டனைகளைச் சிறிதும் கலங்-காமல் விரும்பி ஏற்றோம்! பின் விலைவாசிப் போராட்டத்திலும் மொழிப் போராட்டத்திலும் அவர் தனியாகச் சிறை சென்றார். நான் கைக்குழந்தையுடன் வீட்டில் தனிமைச் சிறையிருந்தேன்.

உள்ளத்தில் சிறு குழந்தையைப் போன்ற குணம். ஆனால் கொள்கை என்றால் அந்த உள்ளம் எஃகைப்போல் உறுதியாகிவிடும். எதிரியைக்கூட தம் பேச்சுத் திறமையால், அன்புடன் அணுகும் முறையால் கவர்ந்துவிடுவார்.

எந்த நேரமும் படிப்பு, படிப்பு. நிறைய இதழிகைகள், கிழமை, மாத இதழ்கள், வெளிநாட்டு, வடநாட்டு இதழிகைகள் அனைத்தும் வாங்கிவிடுவார். ''என்னங்க இவ்வளவு செலவு பொத்தகங்களுக்குச் செலவழிக்கிறீர்களே'' என்று யாராவது கேட்டுவிட்டால் போதும். ''இந்த இயக்கத்துக்காக நான் படிக்கிறேன். எதிரி இயக்கத்தில் நிறைய படித்தவர்கள் இருக்கிறார்கள். சரக்கில்லாமல் அவர்களோடு வழக்காட இயலாது'' என்று ''என்னைப்போல எண்ணி அஞ்ச வேண்டாமா? என்னைப்போல சிலர் இருக்க வேண்டும்'', என்று கூறுவார்.


தாம் தலைவராக ஏற்றுக்கொண்டவரைப் பிறர் பழித்தால் பாய்ச்சல் வேங்கையாக மாறிவிடும் ஆவு (பசு) இவர். வெளி-நாட்டுச் செலவுகள், தொடர்வண்டி, வானூர்தி இவற்றில் எங்கு சென்றாலும் தம் கட்சியின் மாட்சியையும், தலைவரின் பெருமையை-யும் நிலைநாட்டிப் பேசி எப்படிப்பட்டவரையும் தம்பால் ஈர்த்துவிடும் கவர்ச்சி இவரிடம் நிறையவே உண்டு.

Scanned with CamScanner

சின்ன சின்னச் செய்திகளிலும் நிறைவடையும் மிகப்பெரிய உள்ளம். தமக்கென எதையும் வேண்டிப் பெறுதவர். "நல்ல தலைவர், நல்ல கொள்கை, நல்ல மனைவி கிடைத்ததால் என் வாழ்வில் குறையே இல்லை. நிறைவான வாழ்க்கை வாழ்கிறேன். எளிமையில் இனிமை காணுகிறேன்" என்று எல்லோரிடமும் கூறுவார். குழந்தையைப் போன்ற உள்ளம். சப்பான் சென்றபோதுகூட தமக்கென உயர்ந்த பொருள்கள் ஒன்றும் வாங்காது ஒரு குரங்கு பொம்மை - முடுக்கிவிட்டால் கரணமடிக்கும் பொம்மையை மட்டுமே வாங்கி வந்தார். இன்றைய அரசியலுக்குப் பொருந்தாத குமுகாய சீர்திருத்தக்காரர் அவர்.

'தக்கையைப் போன்ற சிறு பொருள். பெரிய கப்பலைக்கூட வீழ்த்திவிடும் ஆற்றல் பெற்றது' — அதுதான் 'டார்ப்பிடோ!' அதைப்போல சிறுசிறு சொற்களால், உறுதியான வழக்காடும் திறமையால் எதிரிகளைத் திக்குமுக்காடச் செய்துவிடுவார். அவரோடு முப்பதாண்டுகள் வாழ்ந்த என் வாழ்க்கையின் பொற்காலம் அது. அவரோடு பகிர்ந்துகொண்ட என் நினைவுகளை விரிவாக ஒரு நூல் வடிவில் எழுத எண்ணுகிறேன்.

மாந்த நேயமும், மாந்தப் பண்புகளும் நிறைந்த ஓர் உயர்ந்த சிறந்த உண்மையான மாந்தர் அவர்! அவர்தான் 'டார்ப்பிடோ!!



(4-ஆம் அட்டை பக்கத் தொடர்ச்சி)

○ : 1282 : என் அரும்பெறல் ஆசிரியரீர், வணக்கம். தென் மொழி, தமிழ்ச்சிட்டு வந்தன. வஞ்சகப் பூனைகளைப் படித்தேன். கண்ணீர் வடித்தேன். நெஞ்சம் துணுக்குற்றது. மெய்ம்மத் தாமரையில் வீற்றிருக்கும் தங்களை அவர் அறியார். தாய்த்தமிழுக்கும், நாட்டுக்கும், தன் இனத்துக்கும் பாடாற்றும் தங்களின் உண்மை அவர்களுக்குப் புரியாது. கெண்டைமீன் சேற்றில்தான் கிடக்கும். என்றாலும் சேறு அதன் உடலில் இம்மியும் ஒட்டாது. கெண்டையின் தன்மையும் எவ்வகையிலும் கெடாது. என் செய்வது ? அப்படித்தான் தாங்களும். சேறு போன்ற அவர்களினிடையில்தான் தங்களின் தொண்டு சிறக்க வேண்டியுள்ளது. நன்றி. வணக்கம். அன்றும் இன்றும் என்றும் தங்கள் மாணவன்,

இளஞ்சித்திரன், சென்னை-48.

○ : 1283 : நெஞ்சில் எழுந்த நினைவுகள் தேங்க, வெஞ்சினம் வெடிக்க, உயிர் துடிப்பு அடங்க, எம் உள்ளக் குமுறல் பொங்க, நாடி நரம்பில் ஓடும் குருதியின் ஒவ்வோர் அணுவும், எங்கோ இருக்கும் விடுதலை மறவனை எண்ணி ஓலக் குரலில் 'ஓ' வென அலறித் துடித்தது !

ஐயா ! தங்களின் தாய்மை உணர்வோடு தமிழுணர்வு கலந்து, 'ஓ', பிரபாகரனே ! கதிர்க்கையனே ! எங்கே இருக்கிறாய்?' என்றழைத்த வெஞ்சின சிம்மக் குரல் வீழும் அலைகடலால், சுழன்று அடிக்கும் சூறுவளியால், சுட்டெரிக்கும் தீக்கதிரின் வெப்பக் காற்றால், காடு, மலை தாண்டி, முட் புதர்கள் நுழைந்து, எங்கோ இருக்கும் வீரத் திருமகனின் செவிப்பறையில் மோதி, எதிரொலி செய்து என் செவிப்பறையைத் தாக்கியது.

கத்திப் படித்தேன். கதறித் துடித்தேன். என்றன் பிள்ளைகளை அருகமர்த்தி அரற்றிப் படித்துக் காட்டினேன். அடிவயிற்றில் எழுந்த நெருப்பு அடங்கவில்லை ! பற்றி எரிகின்றது ! என் செய்வேன் ஐயா !

ஐந்து கோடித் தமிழரின் மானவுணர்வில் தோய்ந்த உங்கள் திருமனம், இப்பாடல் எழுதுங்கால், எப்படிப் பற்றி எரிந்ததோ ! தமிழுணர்வு எப்படித் துடித்ததோ ? குருதியில் தோய்த்து எழுதிய எழுத்தின் உண்மைக் கூற்று வெற்றி மறவனைக் காக்கும் ! தாங்கள் கொட்டிய வெஞ்சின நெருப்பு வீறு கொண்டு காக்கும் ! வீரத் தாய்மைக் குரலால் நீங்கள் கதறி எழுதிய எழுத்து, அத் தமிழ் வீரனை அரணிட்டுக் காக்கும்! ஐயா! அரணிட்டுக் காக்கும்! மலரட்டும் தமிழீழம் ! வெல்க தமிழீழம் !

—நற்றிணை, சென்னை-4.

---

**அன்பர்களுக்கு !**

மடல்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதவும்; நீள மடல்களைத் தவிர்க்கவும்.

# பெருஞ்சித்திரனார் நேருரைகள்

## 'குழந்தை இலக்கிய வளர்ச்சியில் தமிழ்ச்சிட்டின் பங்கு'-2

(மதுரை யாதவர் கல்லூரி மாணவி திருவாட்டி நா. கமலா க. மு. அவர்களின் மெய். மு. (M.Phil) பட்ட ஆய்வுரைக்காக 22-10-85 - இல் எடுக்கப்பெற்ற நேருரைக் குறிப்புகள்.)

19) குழந்தைப் பாடல்களின் பாடு பொருள்கள் யாவை ?

1) இயற்கைப் பொருள்கள் :

(எ-டு) கதிரவன், நிலவு, விண்மீன்கள், உலகம், மலைகள், அருவி, பறவைகள், மலர்கள், விலங்குகள், ஆறுகள், கடல், காற்று, சோலை—முதலியன.

2) செயற்கைப் பொருள்கள் :

வீடு, தட்டு முட்டுப் பொருள்கள், பந்து முதலிய விளையாட்டுப் பொருள்கள் : தோட்டம், கலைகள், கைவினைப் பொருள்கள்—முதலியன.

3) உணர்வுக் கூறுகள் :

அன்பு, அறிவு, நட்பு, பண்பு, செயல், உழைப்பு முதலியன.

4) அறிவியல் கூறுகள் :

கடிகாரம், வானூர்தி, கப்பல், தொடர்வண்டி, உடல் நலம் முதலியன.

5) வாழ்வியல் கூறுகள் :

தமிழ், கல்வி, எச்சரிக்கை உணர்வு, முயற்சி, சீர்திருத்தம், பகுத்தறிவு, நம்பிக்கை, ஊக்கம், வாழ்க்கை அறிவு, பொதுமை உணர்வு, பழக்க வழக்கம், பெரியோர்ப் பணிதல், ஒழுக்கம், உடற்பயிற்சி முதலியன.

20) குழந்தைகளுக்கு அறிவு கொடுக்க விரும்பும் நீங்கள் பெற்றோர்க்கும் கூற விரும்புவது யாது ?

1) குழந்தைகள் எதிர் கால மக்கள், அறிஞர்கள், அதிகாரிகள், ஆட்சியாளர்கள் என்று பெற்றோர் உணரச் செய்வது.

2) அவர்களிடம் ஒழுக்கத்தையும், பொதுப்பண்புகளையும் வளர்த்தெடுத்தல்.

3) அவர்களை மதித்தல், பாராட்டுதல், ஊக்கப்படுத்துதல், அறிவு நலம் பெறச்செய்தல்—முதலியன பெற்றோர் கடமைகள். இவற்றையும் தமிழ்ச்சிட்டு வளர்த்தெடுக்கிறது.

உலக அறிஞர்களின் வரலாறுகள், வேற்று நாடுகளில் மக்கள் அமைப்பு முதலியவற்றைச் சொல்லித் தம் குழந்தைகளையும் அந்த நிலைகளுக்கு உயர்த்தும் வகையில் அவர்களைப் பராமரித்தல் முதலிய அறிவைப் பெற்றோர்க்கும் ஊட்டுகின்ற முயற்சிகளைத் 'தமிழ்ச் சிட்டு' செய்து வருகிறது.

Scanned with CamScanner

21 குழந்தைப் பாடல்களில் மெய்ம்மம் (தத்துவம்) தேவையா ?

மெய்ம்மம் ('தத்துவம்') என்பது என்றும் அழியா மெய்ப் பொருள். இதை அறிவதும் அறிவிப்பதும் தேவை. ஆனல், இதை நேரடியாகக் குழந்தைகளுக்கு உணர்த்தாமல் மறைமுகமாக, இயற்கை அமைப்பின் வழியாக உணர்த்துதல் நல்லுணர்வுகளை வளர்த்தெடுக்கப் பயன்படும். (எ.டு)

என்றும் நினைத்திரு ;
இந்நிலம் பெரிது !
குன்றும் வானும்
கோடி யாண்டுகள்
நின்று நிலைப்பன !
நீயோ அழிபவன் !
என்றும் இருப்பதாய்
இறுமாந்து விடாதே !

ஒருநாள் நம்முடல்
உலகினில் அழியும் !
திருநாள் போலத்
திரிந்த வாழ்வெலாம்
இருளுள் மூழ்கும் !
இல்லாமற் போவோம் !
அருமை உறவினர்
அழ அழ அழிவோம் !

பிறப்பன எல்லாம்
பின்னொரு நாளில்
இறப்பதும் உறுதி !
இதுவே இயற்கை !
மறப்பிலா இந்நிலை
மனத்தினுள் இறுத்திச்
சிறப்புற எண்ணவும்
செய்யவும் முனைக !

— இப்பாடல் தமிழ்ச்சிட்டில் (1973-குரல். 7 ; இசை : ) வெளி வந்த பாடல். இது நிலையாமையை எளிய கருத்துகளாலும் சொற்கலாலும் விளக்குகிறது. இதன் பயனாக இறுதியில் குழந்தைகள் விளங்கிக் கொள்ள வேண்டிய மெய்ம்மம் (தத்துவம்) சொல்லப் பெறுகிறது அஃது, இது :

உன்புது வாழ்வை
உவப்புடன் நடத்து !
அன்பும் அறமுமே
அனைத்தினும் உயர்வாம் !
இன்பம் வருகையில்
எக்களிப் புறாதே !

துன்புற நேரினும்
துவண்டு விடாதே !

ஒருநலம் பெறுகையில்
உலக நலம் நினை !
வருநலம் யாவும்
வகுத்துண்டு வாழ்வாய் !
பெருநிலம், விளைவுகள்
பிறவெலாம் பொதுவே !
மருவிலா உள்ளமும்
வாழ்வுமே மகிழ்ச்சி !

வாழ்நாள் சிறியது ;
வாழ்க்கையோ பெரிது !
வீழ்நாள் வரினும்
வீழாது நற்செயல் !
தாழ்வும் உயர்வும்
தத்தம் செயல்களே !
சூழ்வன மீறிச்
சுடர்வன செய்வாய் !

இப்பாட்டின் முடிவு சிறுவர்களைச் சிந்தனைக்குள்ளாக்கும்.

வெறும் இனிப்பையே உணவென்று சொல்லலாமா ? இனிப்புடன் உடல் நலத்துக்கும் உயிர் நலத்துக்குமான பொருள்களை உண்பதுதானே பயன்தர முடியும்.

அதுபோல் வெறும் பாடலுக்காகப் பாடல் இருக்கக் கூடாது பாடல்வழியாக உண்மைக் கருத்துகள் புலப்படுத்தப் பெறுதல் வேண்டும்.

'தமிழ்ச் சிட்டு' இதுபோல் ஏராளமான பாடல்களைச் சிறுவர்களுக்குத் தந்துள்ளது. வேறு எந்த இதழிலும் இது போலும் பாடல்களைப் பார்ப்பது அரிது.

எடுத்துக் காட்டுக்கு இன்னொரு பாடல் பகுதி.

உன்றன் குடும்பம், உன்றன் வாழ்க்கை
உன்றன் நலன்கள், உன்றன் வளங்கள்—
என்றுமட்டும் நீ ஒதுங்கி
இருந்து விடாதே ! —நீ
இறந்த பின்னும் உலகம் இருக்கும்
மறந்து விடாதே !

உனக்கு மட்டும் நீ உழைத்தால்
உலகம் உன்னை நினைக்குமா ?
தனக்கு மட்டும் வாழ்ந்து செத்த
தனியன் வாழ்வை மதிக்குமா ?

—(தமிழ்ச்சிட்டு 1974. குரல் 8 ; இசை : )

22) குழந்தை என்று எந்தப் பருவத்தைக் கருதுகிறீர்கள் ?

1. குழவிப் பருவம் — ஒன்று முதல் 3 அகவை வரை.
2. குழந்தைப் பருவம் — 4 முதல் 8 அகவைவரை.
3. சிறுவர் பருவமும் ) — 9 முதல் 12 அகவை வரை.
(இளந்தைப் பருவம் )
4. இளமைப் பருவம் — 13 முதல் 19 அகவை வரை.
5. இளைஞர் பருவம் ) — 20 முதல் 25 அகவை வரை.
(குமரப் பருவம்)
6. வாலைப் பருவம் ) — 26 முதல் 35 வரை.
(வாலிபப் பருவம்)
7. முழு ஆள் பருவம் — 36 முதல் 45 அகவை வரை.
8. முதுமைப் பருவம் — 46 முதல் 55 அகவை வரை.
9. கழி முதுமைப் பருவம் — 56 முதல் 65 அகவை வரை.
10. கிழப் பருவம் — 65க்கு மேல் 80 வரை.
11. படுகிழப் பருவம் — 80 க்கு மேல்.

இப்பருவ வரிசையில் 'தமிழ்ச் சிட்டு'ப் படிப்பதற்குரிய பருவம் 3 அகவைமுத 5 அகவை வரையுள்ளவர்களால் படிக்கப் பெறுகிறது.

இந்தப் பருவ அமைப்பு வரிசை நானே உடலியல், மனவியல், அறிவியல், வாழ்வியல் ஆகிய அறிவுநிலைக் கூறுகளின் அடிப்படையில் வரையறுத்தது.

ஆங்கில நிலையிலும் இப்பருவ வரிசையைக் கீழ்வருமாறு ஒப்பிடலாம்.

1) குழவிப் பருவம் — infancy, babe.
2) குழந்தைப் பருவம் — Child (Child-hood)
3) இளந்தைப் பருவம் — lad
(சிறுவர் பருவம்)
4) இளமைப் பருவம் — young
5) இளைமைப் பருவம் — Juvenility
(குமரப் பருவம்)
6) வாலைப் பருவம் ) — Youth
(வாலிபப் பருவம்)
7) ஆள் பருவம் — Person
8) முதுமைப் பருவம் — old
9) கழி முதுமைப் பருவம் — Very old
10) கிழப் பருவம் — Senility
11) படுகிழப் பருவம் — Ripe Sinility

(இவை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக வைத்துக் கொள்ளலாம். தமிழில் பெண்ணுக்குரியவாக உள்ள பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண்—என்பவை இலக்கியத்திற்கே உரிய ஆட்சியுடையவை; இவை இருப்பதிலும் தவறில்லை)

Scanned with CamScanner

23) குழந்தைப்பாடல்களில் அறிவியல் பார்வை எந்த அளவுக்கு இடம் பெற்றுள்ளது ?

இப்பொழுதுள்ள வாழ்க்கை அறிவியல் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. அறிவியலைத் தவிர்த்து வாழ்வியலே இல்லை என்கின்ற அளவில் அறிவியல் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்துள்ளது.

எனவே அறிவியலில் என்ன விளைவுகள் ஏற்பட்டுள்ளன, என்னென்ன விளைவுகள் ஏற்பட உள்ளன என்பன பற்றியும் புதுக் கண்டு பிடிப்புகள் பற்றியும் அவ்வப்பொழுது மிக விரிவாகவும் விளக்கமாகவும், சிறுவர்களுக்கு விளங்கும் வகையிலும் தமிழ்ச்சிட்டில் வெளியிட்டு வருகின்றோம். செய்திகள் கட்டுரைகளாகவும் துணுக்குச் செய்திகளாகவும் மிக எளிய முறையில் கொடுக்கப் படுகின்றன.

24) தமிழ்ச்சிட்டை நடத்துகின்ற முயற்சியில் தங்களுக்கு ஏற்பட்ட படிப்பினை, பட்டறிவு, ஆகியவற்றை அறிய விரும்புகிறோம்.

தமிழ்ச் சிட்டுப் போல், தென்மொழி போல் ஓரிதழ் நடத்தும் முயற்சி, இக்காலச் சூழ்நிலையில் ஒரு தற்கொலை முயற்சிக்குச் சமமானது. பொதுவாகவே, கொள்கைக்காக இதழ் நடத்துவதே இற்றை நிலையில் ஓர் அரிய—இயலாத முயற்சியாகும்.

எனினும் 'தென்மொழி' கடந்த 26 ஆண்டுகளாகவும், தமிழ்ச் சிட்டு' கடந்த 20ஆண்டுகளாகவும் பேரிழப்புடன் நடந்து வருகின்றன.

முழுக்க முழுக்கத் தொண்டு நிலையில்தான் இது போலும் இதழ்களை நடத்த முடியும். தொழில் நிலையிலோ, வாணிக நிலையிலோ ஒருவர் இதுபோலும் இதழ்களை நடத்தி வெற்றி காண இயலாது.

தேவையான முதலீடு, பெரும் உழைப்பு, விடா[illegible] முயற்சி, பணித்துணைவர்கள்—என்னும் நிலையில் இதற்கு முழு ஒத்துழைப்பு கிடைப்பது கடினம்.

இவற்றின் உருவாக்கத்தை விட, இவற்றை விலை போக்குவது மிகவும் கடினமான ஒரு பணியாகும். முகவர்கள் போதுமான ஒத்துழைப்புத் தர மாட்டார்கள். ஏனெனில் இது போலும் இதழ்கள் தாமாகவே விலையாவது என்பது இயலாதது. எனவே எளிதாக விலை போகும் இதழ்களைப் போல் இவற்றைக் கருதி முகாமை கொடுத்து விற்பது இல்லை. ஆகவே 3-ஆம் தர 4-ஆம் தர இதழ்களாகவே இவற்றைக் கருதி ஏனோதானோ வென்று விற்பனை செய்கிறார்கள். இவற்றை விற்பனை செய்வதால் அவர்கள் பெறும் ஊதியமும் குறைவாக இருப்பதால், இவற்றின் விற்பனையில் அதிக அக்கறை காட்டுவது இல்லை.

மேலும் இவ்விதழ்களின் உருவாக்கம் கடினமானதாகும்.

தூயதமிழ்ப் பற்று மட்டும் இருந்தால் போதாது. அதில் போதுமான அறிவும் வேண்டும். அத்துடன் ஆங்கில அறிவும் அறி

வியல், அறிவும் கட்டாயம் வேண்டும். இல்லெனில் அறிவியல் செய்திகளைத் தூயதமிழில் தர இயலாது.

இத்தனைக்கும் மேலாக இத்தகைய இதழ்கள் நடத்துபவர்களுக்குப் போதுமான மனவலிமையும், துணிவும், விடாமுயற்சியும், ஊக்கமும் கட்டாயம் வேண்டும். அத்துடன் பொருள் நிலைத் தொய்வுகளைச் சரி செய்யும்படி வேறுவகையான வருவாயை உடையவர்களாக இருத்தல் வேண்டும். எடுத்துக் காட்டாக இவ்விதழ்களால் ஏற்படும் இழப்புகளைச் சரி செய்யும் படி, நாம் எழுதிய நூலகளின் விற்பனை, சொற்பொழிவுகள் வழியாகப் பெறும் வருவாய், அன்பளிப்புகள்—ஆகிய வழியில் பொருள் வரப் பெறுகிறோம். இல்லெனில் இது போலும் இதழ்களை எவருமே வெற்றியுடன் தொய்வு இல்லாமல் நடத்த முடியாது. அதுபோல் கடந்த காலங்களில் சிலர் முயற்சி செய்து இடையில் தொய்வு ஏற்பட்டுப் போனார்கள் என்பதை எல்லாரும் நினைந்து பார்த்தல் வேண்டும்.

25) தமிழ்ச்சிட்டில் எதிர்காலத்தில் எத்தகைய மாற்றங்களைச் செய்ய விரும்புகிறீர்கள் ?

'தமிழ்ச்சிட்டின் எதிர்காலம் பொருளியல் நிலையில் வளமான ஒரு காலமாக அமையுமானால்,

1) ஓவியங்கள் இல்லாக் குறை நிறைவு செய்யப் பெறும்.

2) ஒவ்வோரிதழ்க்கும் அட்டைப் படங்கள் வெவ்வேறாக அச்சிடப் பெறும்.

3) சிறு சிறு கருத்துக் கதைகள், புதிர்கள், போட்டிகள் போலும் பொழுது போக்குப் பகுதிகள் இன்னும் கூடுதலாக வெளியிடப் பெறும்.

4) சிறந்த மாணவர்களைப் படங்களுடன் அறிமுகப் படுத்தி ஊக்கமளிக்கப் பெறும்.

5) தமிழ் அறிவில் சிறப்புத் தேர்வுகள் நடத்தித் தக்க மாணவர்களுக்குத் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப் பெறும்.

6) இதழ் பரவலான விற்பனைக்குக் கிடைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப் பெறும்.

7) இன்னும் ஆக்கமும் ஊக்கமும் தரும் அனைத்துப் பகுதிகளும் அதில் சேர்க்கப் பெறும்.

8) மாத இதழாக வருவதைக் கிழமை இதழாக ஆக்குவோம்.

26) தமிழ்ச்சிட்டில் வரும் குழந்தைப் பாடல்கள் இன்னும் அளவில் சிறியவையாக இருப்பின் மனப்பாடஞ் செய்ய வாய்ப்பிருக்கும் என நினைக்கிறேன். அது குறித்து உங்கள் கருத்தை அறிய விரும்புகிறோம்.

இக் கருத்து எனக்குண்டு. கூடுமானவரை சிறிய பாடல்களாகவே எழுதி வருகின்றேன். சில நிலைகளில், வளர்ந்துள்ள மாணவர்களுக்காகவே நீண்ட கருத்துள்ள பாடல்களை எழுத வேண்டி உள்ளது. எனினும் சிறியதும் பெரியதுமான பாடல்களையே எழுதி

வந்துள்ளேன். இருப்பினும் தங்கள் கருத்தை எதிர்காலத்தில் இன்னும் சரியாகக் கடைப்பிடித்து எழுதுவேன்.

27) தமிழ்ச்சிட்டின் நோக்கம் எந்த அளவுக்கு நிறைவேறியுள்ளது ?

ஒரு கால் பங்கு அளவுக்கே நிறைவேறியுள்ளது. பொருளியல் வளம் பெற்றால் இன்னும் விரிவாக நிறைவேற வழி மேற்கொள்ளப் பெறும்.

28) நீங்கள் நடத்துகின்ற பிற இதழ்களைத் தமிழ்ச்சிட்டுடன் ஒப்பிட்டுக் காட்ட இயலுமா ?

1) 'தென்மொழி' வளர்ந்த- ஓரளவு தமிழறிவு பெற்றவர்களுக்காக நடத்தப் பெறுவது.

2. 'தென்மொழி' நடையை விடத் தமிழ்ச்சிட்'டின் நடை எளிமையானது.

3) தமிழ்ச்சிட்டில் வெளியிடப் பெறும், தொடர்கட்டுரை-களைத் தவிர, பிற கட்டுரைகள் சிறியவை ; எளிமையானவை. பல தரப்பட்ட அறிவு நிலை உடையவை.

4) பிற இதழ்கள் கூடுதலான பக்கங்கள். தமிழ்ச்சிட்டு தொடக்கத்திலிருந்தே 16 பக்கம். (அட்டைப் பக்கங்களைச் சேர்க்காமல்)

5) விலை குறைவானது, தமிழ்ச்சிட்டு. பிற இதழ்கள் விலை கூடுதலானவை.

6) தமிழ்ச்சிட்டைத் தொடர்ந்து படிக்கும் மாணவர் ஒருவர் ஐந்தாண்டுகளுக்குள் தென்மொழியைப் படிக்கும் திறம் பெறுவது திண்ணம்.

29) உங்கள் எதிர்காலத் திட்டங்களைப் பற்றிக் கூறுங்கள்.

என் வாழ்க்கைத் திட்டங்களாக,

1) தமிழ்மொழியைத் தூய்மையாக வழங்கச் செய்தல்.

2) அதனை வேற்றுமொழிகளின் தாக்கமின்றி வளர்ந்தெடுத்து, அஃது ஓர் அறிவியல் மொழியாகும் தகுதியை உண்டாக்கல்.

3) தமிழினத்தின் அடிமைத்தளையையும் அறியாமையையும் அகற்றி, அதற்குரிய அனைத்து உரிமைகளையும் பெற்றுத் தர முயலுதல்.

4. தமிழ்நாடு தன்னுரிமையும் தனியரசும் உடைய நாடாக விடுதலை பெறச் செய்தல்.

30) தமிழ்ச்சிட்டில் உங்களை மிகுதியும் கவர்ந்த பாடல் எது ?

எத்தனையோ பாடல்கள் இருப்பினும் அதன் தலைப்பிலுள்ள கொள்கைப் பாடல் தமிழ்ச்சிட்டின் நோக்கத்தை நன்கு புலப்படுத்திக் கொண்டுள்ளது.

31) தமிழ் மக்களுக்கு என்ன சொல்ல விழைகின்றீர்கள் ?

தமிழர்கள் தமிழர்களாக நின்று, உலகில் சிறந்ததும், முதலும் மூலமானதுமான தங்கள் தாய் மொழியைத் தூய்மையாகப்

பேசியும் எழுதியும் வருவதுடன், தங்களின் தனித்தன்மை வாய்ந்த கலை, பண்பாடு, நாகரிகங்களை வளர்த்தெடுப்பதற்காக வும், தங்களுக் கென்று ஒரு தனி நாட்டை அமைத்துக் கொள் வதற்காகவும் ஒற்றுமையாகவும் ஒருணர்வுடனும் நின்று முயற்சி செய்ய வேண்டும் என்பதே இன்றைய நிலையில் தமிழர்களுக்கு நான் விடுக்கும் வேண்டுகோளாகும்.

32. குழந்தைப் பாடல்களை எழுதுதற்குக் குழந்தை உள்ளம் இன்றியமையாததா ?

ஆம். கட்டாயம் இன்றியமையாதது. அதை என் பாடல் களிலே பார்க்கலாம்.

33) குழந்தை உள்ளம் பற்றிச் சிறு விளக்கம் தேவை.

கள்ளம் கவடற்ற தூய அன்பு, பிறரிடம் வெறுப்பற்ற தன்மை, அறிவுக்கு அவாவுதல், அடிமையாதல், ஒருவரிடம் எளி தில் ஈடுபடும் பரந்த உள்ளம், தீயவற்றையும், பிறர் செய்யும் தீங்குகளையும் மன்னித்தல், மறத்தல், எப்பொழுதும் நகை முகத் துடன் உரையாடுதல், சினம் கொள்ளாமை, கெகண்டால் உடனே மாற்றிக் கொள்ளும் தன்மை, குழந்தைகளுடன் அளவளாவுதல், விளையாடுதல், உண்மையே பேசுதல், உண்மையாக நடத்தல்,— போன்ற தன்மைகள் குழந்தைமைக்கு உரிய உணர்வுகளும் பண்பு- களும் ஆகும்.

34 சிறுவர்களுள் ஆண், பெண் வேறுபாட்டிற்குத் தகுந்தவாறு பாடல்கள் அமைய வேண்டுமா ?

எல்லாவற்றிலும் அன்று. சில குறிப்பிட்ட நிலைகளின் வேறு படுத்திப் பாடல் எழுதலாம். எடுத்துக் காட்டாக,

1) ஆண், பெண் வேறுபாடுகளுக்குகந்த சில விளையாட்டுகள். கும்மி, கோலாட்டம் முதலியவை பெண்களுக்கே உரிய விளையாட் டுகள்.

2) உடற்பயிற்சிகள் சில — கயிறு தாண்டுதல் முதலியன பெண் பயிற்சிகள்.

3) குடும்ப ஈடுபாடு, குழந்தை வளர்ப்புத் தொடர்பானவை சில.

(1) சமையல், (2) தாலாட்டு, (3) தாய்மை உணர்வு போன்றவை பெண்கள் தொடர்பானவை.

4) தொழில்கள் சில. தையற்கலை, கோலக்கலை, தலைப் புனைவு— முதலியவை பெண்களுக்குரியு கலைத் தொழில்கள்.

—எனவே அவ்வகைகளில் ஆண் பெண் வேறுபாடுகளுக்கு உகந்தபடி பாட்டுகள் எழுதலாம்.

35) பாப்பா, தம்பி, அண்ணன் எனப் பல வகையில் பிரித்துப் பாடுவதில் தனித்தன்மை உண்டா ?

பெரும்பாலும் பொதுவான உறவுகள் இவை. சில நிலைகளில் தனித்தன்மையாக உணர்த்த வேண்டியிருந்தால், அது தொடர் பான தனிச் சிறப்புத் தன்மைகளைப் பாடல்களாகக் கூறலாம்.

Scanned with CamScanner

(எ-டு) (1) தம்பிப் பாப்பா—
(2) அக்காளுக்குத் தம்பி.
(3) தங்கைக்கோர் அண்ணன்.
— என்றவாறு கருத்துகளைக் கூட்டலாம்.

36) பாரதியின் பாப்பா பாட்டு, பாவேந்தரின் இளைஞர் இலக்கியம், பட்டுக் கோட்டையின் சிறுவர் பாடல்கள்—பற்றித் தங்கள் கருத்தைக் கூறுங்கள்.

1) பாரதியின் பாப்பா பாட்டு — எளிமையும் இனிமையும் உடையவை. குழந்தைகளுக்கென்று மிகுதியாக எழுதவில்லை. எழுதிய ஓரிரண்டும் நல்ல பாடல்கள்.

2) பாவேந்தரின் இளைஞர் இலக்கியம் — (தொடக்கத்தில் எழுதிய குழந்தைப் பாடல்களில் உள்ள எளிமையும், இனிமையும் இளைஞர் இலக்கியத்தில் சிறிது குறைவு. கருத்துகளுக்காகக் குழந்தைப் பாடல்களின் அமைப்பையே கொஞ்சம் மாற்றியுள்ளார். இதனால் பயன் சிறிது குறைவாகத் தோன்றுகிறது.

3) பட்டுக்கோட்டையின் சிறுவர் பாடல்கள் — எளிமையும், இனிமையும், பொதுமையும் நிறைந்த கருத்துகள், பாடல்கள், நல்ல விளைவை உண்டாக்குபவை.

37) சிறுவர் இலக்கியம் என்பதைத் தனி இலக்கியமாகக் கொள்ளலாமா ?

கட்டாயம் கொள்ளலாம். இதன் வளர்ச்சி எதிர்காலக் குழந்தைகளுக்கு நல்ல பயனைத் தரும். மேனாடுகளில் இப்படிப்பட்ட பிரிவு எல்லாத் துறைகளிலும் உண்டு.

எ.டு: குழந்தைகள் பூங்கா, குழந்தைகள் நூலகம், குழந்தைகள் அரங்கம் (Childrens' Theatre), குழந்தைகள் விளையாட்டுத் திடல்—முதலியன. ○

---

**அன்பர்கள் கவனிக்க !**

பொறுப்பாசிரியர் அவர்களைவந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம். -அமைச்சர்.

Scanned with CamScanner

# செந்தமிழ்நூல் வெளியீட்டுக் கழகம்.
## பொது அறிவிப்பு.

பேரன்புடையீர் ! வணக்கம் !

நீண்ட நெடுநாள்களாகக் கருத்தில் இருந்துவந்த "செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கழக" அமைப்புத் தொடர்பாக அண்மையில் கீழே கையொப்பமிட்டுள்ள தென்மொழி ஆர்வலர்களும் அன்பர்களுமாகச் சேர்ந்து, ஒரு முடிவெடுத்து இந்த வேண்டுகோளை விடுக்கிறோம்.

அதன்படி மிக நெருக்கமும், தூய தமிழ் வளர்ச்சியில் ஆர்வமும் தென்மொழியின் பால் இடையறாத ஈடுபாடும் கொண்ட நூறு அன்பர்களைத் தேர்ந்தெடுத்து ஒருங்கிணைத்து அவர்களை நூல் வெளியீட்டுக் குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்திருக்கிறோம். அவர்களுடன் தாங்களும் ஒருவராகச் சேர்ந்து கொள்வதற்கான வாய்ப்புண்டு என்பதைப் பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக் கொள்கிறோம். இதற்கு எல்லாருடைய முழு ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

நாங்கள் வகுத்துக் கொண்ட திட்டப்படி அவரவர்களுக்கு ஒதுக்கப்படவிருக்கும் பங்குத்தொகை உரு. 500, 1,000, 2,000, 3,000 ஆகும்.

இத்தொகையைவிட அவரவர்கள் பங்குக்கு கூடுதலாகவோ, குறைவாகவோ தங்களால் செலுத்த இயலும் என்ற நிலை இருக்குமானால், அவர்கள் அவ்விருப்பத்தை எங்களுக்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன், அவர்கள் இத்திட்டத்தையும் அதில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பங்களிப்பையும் முழு மனத்துடன் ஏற்றுக் கொண்டார்கள் என்பதற்கு அடையாளமாக உடனடியாக ஒதுக்கப்பட்ட தொகையை முழுமையாகவோ, அல்லது குறிப்பிட்ட நாளுக்குள் அனுப்புகிறோம் என்கின்ற உறுதி மொழியையோ எங்களுக்கு உடனடியாக விடுத்து வைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

இத் தொகையை, தற்காலிகப் பொருளாளராக அமர்த்தப் பட்டிருக்கும் திரு. துரை. தென்னவன் மே/பா. தென்மொழி, சென்னை-5. என்னும் முகவரிக்கு மட்டும் குறித்து எடுக்கப்பெற்ற வரைவோலை(டிராப்ட்) வழியாக மட்டுமே அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இத்திட்டத்தின் வழி திரட்டப்பட்ட தொகையைக் கொண்டு பாவலரேறு அவர்களின் 'செயலும், செயல்திறனும்' என்கின்ற நூல் முதல் வெளியீடாக வந்து, அதன் வெளியீட்டு விழாவும், சென்னையில் 19-3-88-இல் நடைபெற்றதை அறிந்திருப்பீர்கள். இத்திட்டத்தின் கீழ் மேலும் பாவலரேறு நூல்களும் பிற

தொடர் :6

நூற்சுருக்கம்

# இன்றுள்ள தமிழர்கள் !

நூல்: தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்.
ஆசிரியர் : பர்.க. ப. அறவாணன்.
விலை : 304 பக்கம். உரு 25/-
கிடைக்குமிடம் : ஐந்திணைப் பதிப்பகம்,
282, டைபகிராப்ட்சு சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-5.

இந்தத் துன்பத்திலிருந்து அவர்களை விடுவித்தது நில வேளாண்மை. உடல் மென்மை, மாதவிலக்குத் துன்பம், கருவுற்ற காலம் ஆகியன பெண்களை ஆதி காலத்தில் நிலக்கிழார் ஆக்கின. இன்றும் ஆப்பிரிக்காவில் பல இனக் குழுவைச் சேர்ந்த பெண்டிர் வேளாண்மைத் தொழிலைக் கண்காணித்துக் கொண்டுள்ளனர். ஆடவர் பண்டு போல மாடுகளைக் கூட்டமாகத் திரட்டி நாடோடிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

விளைவின் தொடக்கக் காலம் பலர் ஒன்று சேர்ந்து கூடி உழைக்கும் கூட்டு உருவாக்கமாகவே இருந்தது. காலப்போக்கில் தேவைக்குப் போக மிகுதி விளைவு நேர்ந்த காலத்திலும் அந்த மிகுதி யாருக்கு உரியது என்று சிக்கல் நிகழ்ந்த காலத்திலும், அதைப் பக்கத்தில் உள்ளோர் கொள்ளை அடிக்க முயன்ற காலத்திலும், மிகுதி விளைவையும் உடைமையையும் காப்பாற்றத் தலைமை

---

(முன் பக்கத் தொடர்ச்சி.)

தேவையான நூல்களும் தொடர்ந்து வெளிவர விருக்கின்றன. எனவே இத்திட்டத்தில் சேர விரும்பும் அன்பர்கள் ஆர்வலர்கள் தங்கள் ஆக்கபூர்வான கருத்துகளைத் தெரிவிப்பதுடன், தாங்கள் செலுத்த விரும்பும் தொகையையும் எங்களுக்கு அனுப்பிக் கொடுக்க வேண்டுகிறோம்.

இவண்,
அமைப்புக் குழுவினர்:

திரு. நல்லப்பன், க.மு ;ச.இ.
சென்னை உயர்நெறிமன்ற வழக்குரைஞர் (தலைவர்).
திரு. தென்னவன்கோ,
துணைப்பொதுச்செயலர், உ.த.மு.க.(துணைத்தலைவர்).
திரு. வெற்றிச் செல்வன்,
(செயலர்), வேளச்சேரி, சென்னை.
திரு. துரை-தென்னவன்,
(பொருளர்) அசோக் இலேலந்து, சென்னை.

தாங்கள் தொடர்பு கொள்ளவும் பொருள் விடுக்கவும் வேண்டிய முகவரி :-

துரை. தென்னவன்,
மே/பா. தென்மொழி,
சென்னை - 600 005.

Scanned with CamScanner

தேவையாயிற்று: தலைமைக்குத் துணை ஆட்கள் தேவையாயினர். இந்தக் கட்டத்திலேயே மக்களிடையில் தலைமை, துணைமை, பொதுமக்கள் என்ற இடைவெளியற்ற வகுப்புகள் அரும்பத் தொடங்கி யிருத்தல் வேண்டும்... இன்றும் பல சிற்றூர்களில் இந்த அமைப்பை நாட்டாண்மை, மூப்பு, தலைக்கட்டு என்ற பெயரில் பார்க்கிறோம்.

பண்டைய தமிழ் இலக்கியங்கள் கூட ஏறத்தாழ இதுபோன்ற ஒரு கால கட்டத்தையே எதிரொலி செய்கின்றன. தலைவன், தலைவி, தோழி, தோழன், தாய், செவிலி ஆகிய பெயர்கள் இந்தப் போக்கையே காட்டுகின்றன. இது போன்ற கால கட்டத்தில் திருமணக்கூட்டுகள் கூட மிக எளிய பழக்க முறையாகவே அமைந்திருத்தல் வேண்டும். கழகக் காலத்தில் தனியே ஓர் ஆணும் பெண்ணும் சந்திப்பதும், காதல் கொள்ளுவதும், மெய்யுறத் தழுவுவதும், இருவரும் சேர்ந்து பெற்றோருக்குத் தெரியாமல் உடன் போக்குச் சென்று விடுவதும் பண்டைய மாந்தரின் மண வாழ்வில் இருந்த சிக்கலற்ற தன்மையையே காட்டுகின்றன. ஆணும் பெண்ணும் தாமே கண்டு உரையாடி உறவாடுவது களவு மணம் என்று அன்று ஒப்புக் கொள்ளப் பட்டிருந்தது. எனவேதான் களவு இயல் என்ற தனி இயலே மூத்தோரால் அக இலக்கணமாக வரையப்பட்டிருந்தது. களவியல் என்ற பெயரில் தனி நூல் ஒன்றும் எழுதப் பெற்றது. அதுவும் கடவுளால் எழுதப்பெற்றது என்று கருதப் பெற்றது. (இறையனார் களவியல்)

கழகக் காலத்தில் நிலவழியும் தொழில்வழியும் மக்கள் பெயரிடப்பெற்றிருந்தனர். ஆனால், குறிஞ்சிப் பெண் முல்லை நிலத்தானைத் திருமணம் செய்து கொள்வதிலோ, நெய்தல் ஆடவன் மருதப் பெண்ணை மணந்து கொள்வதிலோ தடையொன்றும் இல்லை.

கழகக் காலத்தில் களவு மணம் இயல்பாகத் தடையின்றி இருந்தது முன்னைய நிலை. காதலித்துக் கைவிடாமல் மணம் முடித்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தினது ஆன களவு வழிப்பட்ட கற்பு மணம் என்பது அடுத்த நிலை. களவுக் காதல் இல்லாமல், பெற்றோர் வழி நிகழும் கற்பு மணம் நன்று என்ற கருத்து அதற்குப் பின் தோன்றிய நிலை. களவே வேண்டாம் பெற்றோர் வழிக் கற்பு மணங்களே ஒப்புக்கொள்ளத் தக்கன என்பது மிகப் பிந்திய நிலை. தொழில்வழிப் பிரிவுகள், குடிவழிப் பிரிவுகளாகவும், குலவழிப் பிரிவுகளாகவும் பிரிந்து விரிந்த போது பெற்றோர் வழித் திருமணமே வற்புறுத்தப் பட்டது. கழகக் காலத்தில் மேற் கண்ட எல்லா நிலைகளும் இடம்பெற்றிருந்தன. அவற்றுள் காதல் வாழ்வே முதன்மை பெற்றிருந்தது. தலைமை பெற்றிருந்தது. தொழில் பிரிவோ, குடிப் பிரிவோ வலுக்காத காலம் அது. எனவே பிறப்பு வழிச் சாதிப் பிரிவற்ற நிலையே பண்டைத் தமிழர் நிலை.

தொழில் அடிப்படையில் பல குடிகள் இருந்தன. குறவர் வேட்டுவர், ஆயர், கானவர், உழவர், பரதவர், நுளையர், எயினர், மறவர், தச்சர், கம்மியர், குயவர், பாணர், பொருநர்,

Scanned with CamScanner

வணிகர் எனத் தொழில்வழிக் குடிகள் இருந்தன. இவை பிறப்பு வழி அமைந்தன அல்ல. அவரவர் மேற்கொண்ட தொழில் வழி ஏற்பட்டவை. போர் வரும் பொழுது எந்தக் குடியினரும் தத்தம் குடும்பத்திலிருந்து, போருக்குப் பிள்ளைகளை அனுப்ப வேண்டும் என்ற மரபு இருந்தது.

போரிடுவதற்கென்றே தனியாக அமைந்த சத்திரிய சாதி அமைப்பு தமிழகத்து இல்லை. தமிழரிடையே சேரன், சோழன், பாண்டியன், வேளிர் என்ற அரசியல் எல்லைப் பிரிவுகள் இருந்தன. 'நீ சோழர் குடி,' 'அவன் பாண்டியன் குடி' என்பன போன்ற குரலைக் கேட்கின்றோம். ஆனால், பிறப்பு வழிச் சாதிப் பிளவுகளைக் கழகக் குமுகாயத்தின் தொடக்க நிலையில் காணுமாறு இல்லை.

கி. மு. 6-ஆம் நூற்றாண்டளவில் ஆரியர் விந்தியம் தாண்டித் தென் மாநிலங்களில் பரவத் தொடங்கினர். அவர் தென்புல வேந்தரோடு முதல் முதல் தொடர்பு கொண்டனர். ஆரியர்தம் தோற்றம் அவர்தம் இயக்கம் ஆகியன தென்புல மன்னரையும் மக்களையும் கவர்ந்திருத்தல் வேண்டும். வெளியாரை ஐயுறுதலோ விலக்குதலோ தமிழர் மரபுகள் அல்ல. புதியோரை விருந்தினராகக் கொண்டு வேண்டிய உதவிகள் அனைத்தும் செய்தல் வேண்டும் என்பது தமிழர் மரபு. எனவே இந்த நல்வரவு ஆரியர்தம் வரவிற்கும் உறவிற்கும் நிலைப் பாட்டுக்கும் பெருங்காரணமாக இருந்தது. ஆரியர் தென் மாநிலங்களில் விரைவில் பரவிய வரலாற்றை அகத்தியர் வரலாறும் வசிட்டர் வரலாறும் இராமன் வரலாறும் எடுத்துரைக்கின்றன.

இவ் வாரியர்தம் தலைமைக் கோட்பாடு பிறப்புவழிச் சாதியாகும். மனுசுமிருதி பிறப்புவழிச் சாதியை உறுதி செய்கிறது. நான்கு வேதங்களுள் மிகத் தொன்மையான இருக்கு வேதத்தின் முன் பகுதியில் பிராமண, சத்திரிய, வைசிய என்ற மூன்று பிரிவுகளும், பின்பகுதியில் சூத்திர என்ற நான்காவது பிரிவும் உள்ளன. இருக்கு வேதத்தின் 10-ஆம் மண்டலத்தில் உள்ள புருச சூக்தத்தில் பிராமணர், இசைன்யர் (சத்திரியர்), வைசியர், சூத்திரர் ஆகியோர் (கீழ்வருமாறு) குறிக்கப் பெறுவர்.

> "அவர்கள் (சாத்தியர் என்ற தேவர்கள்) புருசனைக் கூறு படுத்திய போது, அவனை எத்தனைப் பகுதிகளாகப் பிரித்தார்கள்? அவனுடைய வாய் யாது? அவனுடைய புயங்கள் எவை? அவனுடைய தொடைகளும் பாதங்களும் யாவை?"
>
> "பிராமணன் அவனுடைய வாய்; அவனுடைய புயங்களால் அமைந்தான் இராசன்யன்; அவனுடைய தொடைகள் வைசியன்; அவனுடைய பாதங்களிலிருந்து சூத்திரன் பிறந்தான்"

—இந்தியாவின் வரலாறு, பக். 57-58.

தமிழகம் உள்ளிட்ட தென்னிந்தியப் பகுதிகளிலும் வட இந்தியப் பகுதிகளிலும் சாதியின் பேயாட்டம் இருப்பது உண்மையே. எனினும், சாதிப்பிரிவை வற்புறுத்தும், வரவேற்கும் செய்திகள் தமிழிலக்கியத்தில் இடம் பெறுமலும், ஆனல், அதே சமயத்தில் சாதியப் பாகுபாட்டை எதிர்க்கும் குறிப்புகள் தமிழிலக்கியத்தில் இடம் பெற்றிருப்பதும் எண்ணத்தக்கன.

இவற்றிற்கு மாருன சமசுக்கிருத்தில் வருணசிரம தருமத்தை வற்புறுத்தும் போக்குகள் இருக்கு வேத காலம் தொட்டு, மிகுதியாக இருந்து வருவதையும், சாதிப் பிரிவுகளுள் பிராமணர் தலையாய இடம் பெற்று வருவதையும் சமசுக்கிருத மூலங்கள் தெரியப் படுத்துகின்றன. எனவே, சாதிப் பாகுபாட்டின் பிறப்பிடம் சமசுக்கிருத வேதங்களே. அதனைப் பேணி வளர்த்தவர் பிராமணரே என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை.

இச்சான்றுகளிலிருந்து பிறப்பு வழி சாதிப் பிரிவுகள் ஆரியர் தம் உடைமை என்பது புலனுகும். தமிழ் நாட்டு அரசரோடு சேர்ந்து வாழ்ந்து பெற்ற ஆரியர்தம் சாய்கால் தமிழ்க்குமுகத்தை எளிதாக ஊடுருவியது. பொதுவாகத் தமிழர்கள் மன்னன் வழி வரும் மதமாற்றத்துக்கும் மனமாற்றத்துக்கும் எளிதில் ஆட்படுவர். இதனைப் பிற்காலத் தமிழர் வரலாறும் வலியுறுத்தும்.

களப்பிரர் மன்னர் சைனர் என்பதால் தமிழர் எளிதில் சைனராயினர். களப்பிரரை வீழ்த்திய பாண்டியன் கடுங்கோன் சைவன். எனவே தமிழரும் சைவராயினர். கி.பி. 7-ஆம் நூற்றுண்டில் தமிழ் நாட்டையாண்ட மகேந்திர பல்லவன் முற்பாதி வாழ்வில் சைனன். பிற்பாதி வாழ்வில் சைவன். மதுரையை ஆண்ட பாண்டியன் கூன் நெடுமாறன் முற்பாதி வாழ்வில் சைனன். பிற்பாதி வாழ்வில் சைவன். அக்கால மக்களும் மன்னருக்குத் தக மதம் மாறினர். இசுலாமியர் ஆண்ட போது மக்களுள் பலர் இசுலாத்திற்கு மாறினர். ஐரோப்பியர் ஆண்டபோது அவர்கள் கிறித்துவராயினர். எனவே அரசிற்கும், அதனது அதிகாரத்திற்கும் அஞ்சி ஒத்துவாழும் மக்கள் கூட்டம் தமிழர் கூட்டம் என்பதால் வட ஆரியர் தமிழ் நாட்டு அரசரை முதலில் தம் வயம் ஆக்கினர். (இதற்குக் கழக இலக்கியங்களில் நிறை சான்றுகள் உள.)

ஆக, வடபுலத்து இருந்து வந்த ஆரியர் தமிழரசனரை வகையாக அகப்படுத்திக் கொண்டனர். எனவே, ஆரியர் வழி அவர் தம் வருணசிரம சாதியப் பிரிவுகள் தமிழரிடம் பரவுவது எளிதாயிற்று. எனவே தொழிற்பிரிவு ஆரியர்தம் சாதியப் பிரிவை ஏற்பதற்குக் கழகக் கால மன்னர்களுள் சேர மன்னர்கள் பார்ப்பன வல்லாண்மைக்குப் பேரளவு இடமளித்தார் என்பதைச் சேரர் பற்றிய செய்யுள்கள் புலப்படுத்துகின்றன. இதிலிருந்து சேரமன்னர் ஆரியமயம் ஆனதுடன், சேர நாட்டில் இருந்த தமிழ் மொழியும் ஆரிய மயமாகி மலையாளமாகத் திரிந்தது.

Scanned with CamScanner

குறிப்பிட்ட தொழிலைச் சார்ந்த மக்கள் தங்கள் தொழில் சமுக்கத்தைக் காப்பாற்ற வேண்டித் தங்கள் தொழிலைச் சார்ந்தவர்களிடையே கொள்வதும் கொடுப்பதுமாக வரன் முறைப்படுத்திக் கொண்டார்கள். சுக்கிலயசுர் வேதம் புருச சூக்தம் பற்றிய பகுதியில் குறிப்பிடும் தொழிற் கூட்டப் பெயர்களில் பல சாதிப் பெயர்களாகவே அமைந்துள்ளன. அரசுக்குத் தேவையான தொழில் நுட்பத் திறவோர்கள் அந்தந்தத் தொழில் வல்லார் குடும்பத்தில் பிறந்திருக்க வேண்டும் என்று அர்த்த சாத்திரம் மொழிகின்றது. அன்றியும் சாதிகள் உள்மனக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், பரம்பரைத் தொழில்களையே செய்துவர வேண்டும் என்றும் சமசுக்கிருதச் சாணக்கியம் எடுத்துரைக்கின்றது.

கி.மு. 3-ஆம் நூற்றாண்டளவில் சந்திரகுப்த மௌரியர் அவையில் கிரேக்கத் தூதுவனாக இருந்த மெகத்தனிசு வட இந்தியாவை மனத்துள் கொண்டு எழுவகைச் சாதிகளைக் குறிப்பிடுவார். அவையாவன. 1. மெய்ப்பொருளறிஞர்கள், 2. உழவர்கள், 3. ஆயர், 4. கம்மியர், 5. பொருநர், 6. அதிகாரிகள், 7. மந்திரத்துணைவர். இவ்வேழு சாதியினரும் அயல்சாதியில் திருமணம் செய்து கொள்ள முடியாது என்றும், எந்தச் சாதியாலும் தம் தொழிலை விடுத்து வேறு தொழிலைச் செய்ய முடியாது என்றும் மெகத்தனிசு குறிப்பிடுவார்.

ஆரிய சட்ட நூலான மனுசுமிருதி வருணாசிரம அடிப்படையில் எழுதப்பட்டது என்பது வெளிப்படை. மனுநீதியையே ஆரியச் செல்வாக்கால் தமிழரசரும் மேற்கொண்டனர் என்பதை மனுநீதிச் சோழன் என்ற பெயரும் மனுவை அரச சாத்திர நூலாகத் தமிழரசர்கள் ஒப்புக்கொண்டதற்கான பல்வேறு கல்வெட்டு, இலக்கியச் சான்றுகளும் குறிப்புகளும் காட்டுகின்றன. எனவே, கழகக் காலத்திலேயே ஆரியர்தம் சாதிப்பிரிவு தமிழர் வாழ்வில் இடம் பெறத் தொடங்கி விட்டது. இதனை அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்று நால்வராகப் பிரித்து அவருக்குரிய தொழிலையும் பகுத்துக் கூறும் தொல்காப்பியம் தெளிவாக்குகிறது. தொல்காப்பியர் உயர்ந்தோர் எனக் குறிப்பிடும் அந்தணர் ஆரியப்பார்ப்பனரே என்பதில் ஐயமில்லை. ஓதுதலை உயர்ந்தோருக்கு மட்டுமே தொல்காப்பியர் சார்பாக்குவது இதனை வலியுறுத்துகிறது. ‘வேற்றுமை தெரிந்த நாற்பால்’ என்று வரும் புறநானூற்று அடி குறிப்பிடும் நால்வேறு பிரிவு எது என்பது தெளிவாகத் தெரியவில்லை. எனினும் இப்புறநானூற்றுக் குறிப்பு, பிற்காலத்துச் சிலப்பதிகாரத்து வரும் நால்வேறு பால் என்ற குறிப்பும் அந்தணர் முதலான நான்கு பிரிவையே காட்டக் கூடும்.

கழகக் காலத்தில் ஆரிய வல்லாண்மையால் தொடங்கிய சாதிப் பாகுபாடு பின்னர் சமண, பௌத்தத்தால் கடுமையாக எதிர்க்கப்பட்டது. சமணம் சாதியற்ற தமிழ்க் குமுகத்தைக் காணத் துடித்தது. அதன் இலக்கியங்கள் சாதியற்ற

சமநிலையை அடிதோறும் சொல்தோறும் வற்புறுத்தின. ஆனால், அந்தோ, சமணம் ஆரிய சமயத்தின் பிற்கால உருவமான வைதிக சமயத்தால் வீழ்த்தப்பட்டது. மீண்டும் சாதியம் தலைமை பெற்றது. தமிழ்க் குமுகம் பிளவு பட்டது; பிரிவு பட்டது. பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும், பிற்காலப் பாண்டியர்கள் காலத்திலும் நாயக்கர் காலத்திலும் சாதி வழியே அனைத்தும் அமைக்கப் பெற்றன. எனவே பிராமணர்கள் உச்ச நிலையில் இருந்தார்கள். ஏனையோர் இழிவு நிலையில் இருந்தார்கள். கோயிலுட் சென்று இறைவனை வழிபடும் உரிமையைக் கூட ஏனைய சாதியார் இழக்க வேண்டி ஆனது.

நந்தன் என்ற பறையர் குலத்துச் சைவ பத்தன் தில்லைக் கோயிலுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டான். காலில் செருப்பு அணிவதும், ஆண்கள் மேல்துண்டு அணிவதும், பெண்கள் மேல்சட்டை அணிவதும் கூட ஏனைய குலத்தாருக்குத் தடுக்கப்பட்டன. சாதியின் கொடுமையை எழுதப் பக்கங்கள் போதா. குளம், நீர்நிலை போன்ற பொது நீர் நிலைகளில் கூட (பிற இன மக்கள்) அனைவரும் பயன்படுத்தாதவாறு தடை செய்யப்பட்டனர். தொட்டால் தீட்டு (பார்த்தால் தீட்டு) என்ற தீண்டாமை, (காணாமை) என்ற கொடும் நடைமுறைகள் எல்லா இடங்களிலும் பரப்பப்பட்டன. வலங்கை இடங்கைப் போராட்டங்கள், சோழர் காலத்து நிகழ்ந்தன. பிராமணர்களையும் வேளாளர்களையும் எதிர்த்துப் பெருங்கிளர்ச்சிகள் நிகழ்ந்தன. மிகச் சுருக்கமாகச் சொல்லப் போனால், தமிழ்க் குமுகாயம் இத்துணை அளவு கேடுகெட்டுச் சீரழிவதற்குத் தலைமையான காரணம் சாதிப் பிரிவாகும்.

(தொடரும்:)

## வருந்துகிறோம்!

○ நெடுநாளைய 'தென்மொழி' அன்பரும் 'தமிழ்ச்சிட்டு' எழுத்தாளரும், சிறந்த ஆங்கில அறிஞரும் ஆன சி. நா. செந்தமிழ்ச் செல்வன் அண்மையில் காலமாகி விட்டார் என்பதை மிகு வருத்தத்துடன், தெரிவிப்பதுடன், எம் ஆழ்ந்த இரங்கல்களை அவர் குடும்பத்தார்க்கும் நண்பர்களுக்கும் உரித்தாக்குகின்றோம். (முழுச் செய்தி, தமிழ்ச்சிட்டு குரல் 19, இசை 5-6.)

○ நம் தென்மொழியன்பரும், அருந்தமிழ்த் தொண்டரும், செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கழகத்தின் செயலாளரும் ஆகிய திரு. கோ. வெற்றிச் செல்வன் அவர்களின் அன்னையார் 62 அகவையுடைய தனலக்குமி அம்மாள் தம் 6 ஆண் மக்களையும் 3 பெண் மக்களையும் அன்புக் கணவரையும் விட்டு விட்டு, இயற்கை யெய்தினார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவர் குடும்பத்தினர்க்கும் உறவினர், நண்பர்களுக்கும் எம் ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். ○

Scanned with CamScanner

தங்களது எண்ணச் செலவு அதிகம் ஏற்படக் கூடாதென்பதால் நிறுத்துகிறேன்!

ஒருகால், வற்றாத வள வாழ்வு ஏற்பட்டாலும்கூட வாழ்வில் மகிழ்வில்லை. துன்பத்திலும் இன்பத்திலும் நான் இறுமாந்து நெஞ்சு நிமிர்த்தி - எனது அறிவு சார்ந்த நண்பர்களிடம் எல்லாம்- ''தென்மொழியில் இருந்தேன் தெரியுமா! அய்யாவைத் தெரியுமா!'' எனவும் இன்னும் பலவாறாகவும் சொல்லி மகிழும் பேற்றுக்குச் சொந்தக்காரராகத் திகழும் சொக்கத் தங்கமே! நீர் வாழ்க! உம் புகழ் வெல்க! பணி சிறக்க! நலம் சூழ்க! -என சிந்தை அணு ஒவ்வொன்றிலும் சூழ்ந்திருக்கும் - யான் என்றும் வணங்கும் குமரப்பெருமானை இரு கை கூப்பி வேண்டுகிறேன்.

யான் நலமே. தாங்களும் - தங்கள் இல்லத்தில் அனைவரும் நலமோடிருக்க நாடுவேன் இறையை. தங்கள் மருகர் அருளி தஞ்சையில் உள்ளதாகவும் - தங்கள் செல்வர் திருச்சியில் உள்ள தாகவும் அறிகிறேன். இத்துடன் உருபா 40 அனுப்பி உள்ளேன். தென்மொழி - தமிழ்ச்சிட்டு இனி தொடர்ந்தனுப்பவும், எஞ்சிய உருபா10/ஐ எனது அன்பான அன்பளிப்பாய்க் கொள்ளவும் எனக் கேட்டுக் கொள்கிறேன். கண்ணனைப் பார்க்க வந்த குசேலர் போல, அவலுடன் ஆவலாய் மிக விரைவில் - சென்னைக்கு வந்து சந்திப்பேன். தங்களது மறுமொழிக்காக வழிமேல் விழி வைத்தேங்கும் காதலுடை நங்கைபோல் காத்துள்ளேன் என முடிக்கிறேன். பிற நேரிலோ அல்லது மடலிலோ.

—அன்பு சான்ற, தமிழ்க்கனல். கண்டிதம்பட்டு.

○ : 1279 : பேரன்பின் ஐயா அவர்களுக்கு வணக்கம். முன்னாள் தமிழக முதல்வர் காலமான நேரத்தில் என்னுள் எழுந்த உணர்ச்சிகளை நானே திறனாய்வு செய்த போது, 'மாந்த உணர்ச்சியில்லாமல் இருக்கின்றேனே' என்று ஐயுற்றேன். ஆனால் தங்கள் ஆசிரியவுரையைப் படித்தவுடன் அஃது என் உள்ளத்தை வருடிக் கொடுத்தது போல் இருந்தது. பலரிடம் தங்கள் பேராண்மையைச் சொல்லி மிகவும் மகிழ்ந்தேன். அந்த மகிழ்வைத் தங்களுக்கு எழுத நினைத்துச் சற்றுக் காலம் தாழ்ந்தது. இந்நிலையில் ஈழ விடுதலைப் புலிகளை அழிக்க 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய வீரர்கள் சென்ற செய்திகள் வந்தன. ஆதலால் என் மகிழ்வைத் தெரிவிக்காமல் விட்டு விட்டேன். அதையடுத்து இப்போது வந்த தென்மொழி சு 24 ஒ 1-2 தாங்கள் எழுதியுள்ள ஆசிரியவுரைப்பாவில் ''பிரபாகரனே! கதிர்க்கையனே! நீ எங்கே இருக்கிறாய்?''— என்னும் அருள்மொழிகள் கண்டு உருகுகினேன். ஈழத் தமிழர் நினைவே என்றும் உள்ளது. செந்தமிழ் நூல் வெளியீடு பற்றிக் கூட உண்மையிலேயே மகிழ முடியவில்லை.

தங்களன்புள்ள — த. அன்பழகன், ம. காயில்.

○ : 1280 : அன்புமிக்க ஐயா, வணக்கம். நான் என்மகள் பணியில் சேர நேர்முகத் தேர்வு ஒன்றிற்காக ஈரோடு சென்றிருந்தேன். திரு. இராமலிங்கம் (பாவேந்தர்) அவர்களின் வீட்டில் தங்கி இருந்தேன்.

அங்கு தங்களுடைய உள்ளத்தைக் கண்டேன். அங்கு அனைவரும் தமிழ்ப்பண்பு, பின் விருந்தோம்பல், அன்பின் வழி நடத்தினார்கள். அப்போது தங்களை நினைத்து நினைத்து மகிழ்ந்தேன். உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தோழர்கள் மிக உயர்ந்த பண்பு நிறைந்த உள்ளத்தினராய் இருக்கிறார்கள். இன உணர்ச்சியோடு இருக்கிறார்கள் என எண்ணும்போது தங்களுடைய பணி நற்பயனை நாட்டுக்கு நல்கும் என்பதில் எவ்வகை ஐயமும் இல்லை.

தென்மொழி, தமிழ்ப் பண்பை வளர்த்தெடுத்திருக்கிறது. திரு. இராமலிங்கனுர் அவர்கள் எதையும் கூருமலே அவர்களின் வீட்டுப் பெண்களும் பிள்ளைகளும் அன்பு கனிய விருந்தோம்பல் செய்து மற்றவர்களுக்கு அறிவு புகட்டும் அன்புள்ளம் கொண்டவர்களாய்ச் செயலாற்றினர். அன்னுருடைய தம்பியின் அன்பிற்கு ஒரு முற்றுப் புள்ளியே இல்லை என்றவாறு இன்முகங் காட்டினர். சில இல்லங்களில் ஏனையோர் முகஞ்சுளிக்கும் நிலைகளைக் கண்டிருக்கிறேன். ஆனல் இங்கு அனைவருமே தென்மொழி அன்பர்களாகப் பண்பு நிறைந்த சுற்றத்தார்களாக இயங்கினர். பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் நாட்டில் நல்ல பண்புகளையும் வளர்த்திருக்கிருர்கள் என்பதை அன்று திரு. இராமலிங்கனுர் அவர்களின் இல்லத்தில் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தேன். மகிழ்ச்சியின் அளவு இவ்வளவுதான் என்று கூற இயலாத என்னல் எப்படி — எதையெல்லாம் எழுதுவது என்றே தெரியவில்லை.

கழக முன்னேற்றம் பற்றியும் அன்னுருடன் அவர்கள் தம்பியும் சேர்ந்து பேசினேம். அமைப்புப்பற்றி உரையாடினேம். உங்களுடைய பணி உறுதியாகத் தமிழகத்தில் தமிழ், இன, நாட்டு உணர்ச்சி அப்பழுக்கற்ற வழியில் சென்று பயனளிக்கும் என பது உறுதி. வணக்கம். தங்கள் அன்புள்ள,

—அதியமான், தாழையூற்று.

O: *1281:* மெய்த்திறஞ்செறிந்த சொற்றமிழ்ப் பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம். சுவடி-23; ஓலை-12, சுவடி-24 ஓலை 1-2 தென்மொழி இதழ்கள் கிடைக்கப்பெற்றேன்.

ம.கோ.இரா-வைப் பற்றித் தாங்கள் எழுதிய ஆசிரிய உரை சாலப் பொருத்தமானதே. கல்லா ஏழை மாந்தரின் அறியாமையையும் திரைப்படக் கவர்ச்சியையும் பயன்படுத்திக்கொண்டு, அவர் தமிழ்நாட்டைச் சீரழித்த கொடுமையை மூடி மறைப்பவர் இனத்திற்கு இரண்டகம் செய்தவர்களே ஆவர்.

கத்தித் திரியும் கழுவடி நாய்களும் வெற்றிலைப் பெட்டிகளும் பொறுக்கித் தின்னிகளும் ம.கோ.இரா.வை வானளாவப் புகழ்ந்த பொய்ப் புகழ்ச்சிகளை, ஏழை மக்கள் இன்னமும் நம்பிக் கொண்டிருப்பதை நினைக்கும்போது, கண்களில் செந்நீர் அன்றோ வடிகின்றது. எறும்புப் புற்றை எவரெசுட்டுக் கொடுமுடியாகக் காட்டி, இந்தப் பத்தாண்டுக் காலம் செந்தமிழ் நாட்டையே பாழ்படுத்திய வஞ்சகப் பேய்கள், இன்று பதவி வெறி பிடித்தாட்ட ஆலாய்ப் பறக்கின்றுர்கள். ஐயோ... அவர்கள் கையில் தமிழ்நாடு மீண்டும் அகப்பட்டால் என்னுவது?

கண்காணி இல்லென்று கள்ளம் பல செய்யும் எத்தர்களைக் கண்காணித்துத் தாங்கள் எழுதிய ஆசிரிய உரை உறுதியாகப் படித்த தமிழர்களுக்கும் உறைக்கும் என்பது திண்ணம். இனிமேலாவது தமிழாய்ந்த தமிழன் ஒருவன் முதலமைச்சராய் வர தமிழர் விழிப்புடன் செயலாற்ற வேண்டும்.

அடுத்து, ஈழமறவன் பிரபாகரனைப் பற்றித் தாங்கள் எழுதிய ஆசிரிய உரை, எம்போன்ற பல்லாயிரம் தமிழ்நெஞ்சங்களின் குரலாகவே ஒலித்தது. பிரபாகரனின் தன்னேரில்லா வீரத்திற்கும் இனப்பற்றுக்கும் இதைவிடவும் மிக்கான ஒரு புகழாரம் அமையாது என்பது என்றன் பணிவான கருத்து. அன்பன்,

—வள்ளி கேள்வன், ஈரோடு.

(தொடர்ச்சி உள்ளே 16-ஆம் பக்கம்)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)